
# திருமலைத்தீபம்

**Thirumalaitheepam**

தீபம் – 91 தை – பங்குனி 2025 இல. 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 60/=

## ஆயரின் செய்தி

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

**யூபிலி ஆண்டில் ஆசீர் நிறைவாக அமைய வாழ்த்துகின்றேன்!**

டிசம்பர் 29ஆம் திகதி திருக்குடும்பப் பெருவிழா ஞாயிறு மாலை புனித மரியாள் பேராலய நுழைவாயிலைத் திறந்து வைத்து சிறப்புத் திருப்பலியோடு எமது மறைமாவட்டத்தில் யூபிலி ஆண்டைத் தொடங்கி வைத்தோம். சந்தர்ப்பங்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. சந்தர்ப்பங்கள் யாருக்காகவும் காத்திருப்பதுமில்லை. நாமே அவற்றைப் பற்றிக்கொள்ள வேண்டும். யூபிலி ஆண்டு எமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பம், ஆசீர் இதை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் என பல திட்டங்களை வகுத்துள்ளோம்.

இதன்படி ஜனவரி மாதம் 10ஆம் திகதி குருக்கள், இருபால் துறவிகளுக்கும், 11ஆம் திகதி பொதுநிலை நம்பிக்கை யாளர்களுக்குமான சிறப்புக்கருத்தமர்வானது நடைபெற்றது. அருட்பணி விமல் திரிமான மற்றும் அருட்பணி அல்வின் பீட்டர் பெர்னாண்டோ இருவரும் 'கூட்டொருங்கியக்கத் திருஅவை,' 'யூபிலி ஆண்டு' ஆகிய தலைப்புகளில் இரு நாள் கருத்தரங்கையும் நடாத்தினார்கள். அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்த இக்கருத்தரங்கில் பொதுநிலையினர் பெருமளவில் பங்குபற்றியது திருப்தியளிக்கின்றது.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்...

## நோயினால் பாதிக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உடல்நலனுக்காக பிரார்த்தனை செய்வோம்.





இறை அருளினாலும் திருத்தூது ஆட்சிப்பீடத்தின் தயவினாலும்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்
கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆகிய நாம்
நம் மறைமாவட்டத்திலுள்ள
அருட்பணியாளர்கள்,
இருபால் துறவற சகோதர சகோதரிகள்,
பொதுநிலை நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும்
இறைவனின் அருளும் ஆசீரும் வேண்டி எழுதும்

**2025 ஆம் யூபிலி ஆண்டிற்கான மேய்ப்புப்பணி மடல்**

*கிறிஸ்துவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!*

இறையாசீர் உங்கள் உள்ளங்களையும் இல்லங்களையும் உங்களின் ஒவ்வொரு முயற்சியினையும் நிறைத்து வழிநடத்த வாழ்த்துகின்றோம்.

பல்வகை எதிர்பார்ப்புக்களுடனும் திட்டங்களுடனும் நாம் புதிய ஆண்டினுள் நுழைகின்றோம். சிறப்பாக யூபிலி ஆண்டானது எமக்கு ஆன்மீக மற்றும் சமூக ரீதியில் பல முன்னேற்றங்களைத் தரவேண்டுமென்கிற எதிர்நோக்கு, நம்பிக்கையுடன் இவ்வாண்டில் பயணிக்கின்றோம்.

வழமைபோன்று இவ்வருடமும், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், பொதுநிலை நம்பிக்கையாளர்களுக்கான செயற்திட்டங்கள் பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட, ஆணைக்குழு மட்டங்களில் நடைபெறும். ஆன்மீகம் மற்றும் முழுமனித சமூக வளர்ச்சியினை இலக்காகக் கொண்டு இவை ஒழுங்கு செய்யப்படும்.

### யூபிலி ஆண்டு 2025

யூபிலி ஆண்டை முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் பல திட்டங்களை முன்மொழிவு செய்துள்ளார். ஒவ்வொரு துறையினரையும் தத்தம் துறைகளில் உள்ளவர்களை உள்வாங்கிச் சிறப்பிக்கும் நோக்குடன் இவை அமையப் பெற்றுள்ளன. யூபிலி ஆண்டை நோக்கிய எம் ஆயத்தப் பயணமதில் 2024ஆம் ஆண்டை இறைவேண்டலின் ஆண்டு என நாம் சிறப்பித்தோம். இவ்யூபிலி ஆண்டினை 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்' ஆண்டாக சிறப்பிக்கின்றோம். அதாவது உலகில் போரினால் ஏற்படுகின்ற தாக்கம், கொவிட் பெருந்தொற்றின் தொடர் விளைவுகள், உலகளாவிய காலநிலை மாற்றத்தால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் போன்றவற்றின் மத்தியில் புதிய எதிர்நோக்கினை வழங்குவதே இவ்யூபிலி ஆண்டின் நோக்கமாகும்.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்...

## மறைமாவட்டத்தின் தொலைத்தொடர்பு மையத்தின் கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டு பின் கலைக்கூடத்தில் பணியாளர்களுக்கான சிறப்பு திருப்பலி ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.





உலக தொடர்பாடல் யூபிலி தினத்தை முன்னிட்டு 130 மாணவர்களுக்கான **“தொடர்பாடல் வழியாக எதிர்நோக்கை உருவாக்குவோம்”** எனும் தலைப்பில் மறைமாவட்ட தொலைத்தொடர்பு மையத்தின் இயக்குனர் அருட்பணி. X.I ரஜீவா தலைமையில் அதி.வண. ஆயர் Dr. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பு கலந்துரையாடலும் கருத்தமர்வும் 24.02.2025 அன்று யூபிலி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கருத்தமர்வில் அருட்பணி எமர்சன் றாகல், திருவாளர் சந்திரன், திருவாளர் சஞ்ஜீவன் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு மாணவர்களுக்கு தொடர்பாடல் முக்கியத்துவத்தை குறித்தும் எதிர்நோக்கை குறித்தும் சிறப்பு உரை வழங்கினார்கள்.







பத்திரிகை ஆசிரியரின் பேனா...



நடந்துமுடிந்த 2025ஆம் ஆண்டிற்கான 77வது சுதந்திரதினக் கொண்டாட்டம் எளியமுறையில் நடைபெற்றது எல்லோராலும் வரவேற்கதக்க விடயமாக அமைந்திருந்தது. அதே போன்று 2025ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுப்பாதீடு (பட்ஜெட்) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது எல்லோராலும் வியப்பாகவே பார்க்க தோன்றியுள்ளது. ஏனெனில் பொருளாதார ஸ்திரமற்ற நிலையிலும் அதிகபடியான அனுகூலங்கள் மக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இது எவ்வாறு சாத்தியமாகும் என்பதே கேள்விக்குறியாக உள்ளது. ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்ட பாதீட்டில் **“மலையக மக்கள்”** என்னும் சொல்லாடல் குறிப்பாக மலையக மக்களை நெகிழ வைத்திருப்பதைப் போன்று யாழ் நூலக அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியுடனான வடக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி சம்மந்தமாகவும், தமிழர்கள் மகிழ்ந்திருப்பது அவர்களின் கருத்துக்கள் வழியாக காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி சம்மந்தமாக குறிப்பிடாதது கவலையளிக்கிறது. பாதீட்டின் இறுதிப்பகுதிகளில் ஜனாதிபதியின் உரையில் தெரிவிக்கப்பட்ட **“முன்மொழிகின்றோம்”** என்னும் சொல்லாடல் பலவிதமான சந்தேகங்களை விளைவித்திருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னிப்பாதீடு எவ்வாறு அமுலாக்கப்படும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டிய துர்பாக்கிய நிலைமைக்கு இலங்கை மக்களாகிய நாம் தள்ளப் பட்டிருக்கின்றோம் என்று சொல்வதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இருப்பினும் எதிர்கால சந்ததியினரின் கல்வி வளர்ச்சிக்கான பண ஒதுக்கீடுகள் குறித்துப்பாராட்டியே ஆகவேண்டும்.

இலங்கைத் திருநாட்டின் தற்போதைய களநிலவரம் இவ்வாறு இருக்க; இயேசு குழந்தையின் பிறப்பு விழாவை கொண்டாடி முடித்து, புத்தாண்டிலும் களிகூர்ந்து, தற்போது இயேசு ஆண்டவரின் பாடுகள் மரணத்தை தியானிக்கும் தவக்காலத்திற்குள்ளே நுழைந்திருக்கின்றோம். தவக்காலம் சோகத்தின் காலமல்ல மாறாக தனித்திருந்து இயேசுவின் சிலுவைப்பாதையை தியானித்து, செபித்து, நோன்பிருந்து, பிறரன்பு செயல்களில் ஈடுபட்டு சாத்தானை முறியடித்து உயிர்ப்பு என்னும் இயேசுவின் வெற்றிவாகையில் பங்கெடுப்பதாகும்.

மனிதர்களாகிய நாம் எல்லோரும் பலவீனர்கள், பாவிகள். ஆகவே நாம் மனம்மாற தளத்திருஅவையால் வடிவமைக்கப்பட்டதே இந்த அருளின் காலமாகிய தவக்காலம். அருளின் காலத்திலே நாம் இறைவனின் அருட்கொடைகளை எமதாக்கிக் கொண்டு பிறறையும் எம்மோடு சேர்த்து எதிர்நோக்கின் திருப்பயணிகளாக யூபிலி ஆண்டில் கைகோர்ப்போம்.

யூபிலி ஆண்டை விமரிசையாகக் கொண்டாட பல திட்டங்களைத் தீட்டி எம்மை ஆன்மீகத்தில் வளர்வதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் முதல் சாட்சியாய் செயற்பட்டார். உலக திருஅவையினரிடம் இருந்து கருத்துக்கணிப்புகளை உள்வாங்கி யதார்த்த முறையில் திருஅவையின் வகிபாகங்களை வகைப்படுத்தியிருந்தார். ஆனால் தற்போது நமது திருத்தந்தை சுகயீனமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கின்றது. விசுவாசிகளாகிய நாம் தனித்தும், ஒன்று சேர்ந்தும் திருத்தந்தையின் உடல் உள நலனுக்காக உறுதியோடு செபிப்போம். இறை ஆசீர் என்றும் உங்களோடு தங்குவதாக.

மீண்டும் சந்திக்கும் வரை..

*அருட்பணி. அ.அ. றொஹான் பேனார்ட்*
*ஆசிரியர்*
*திருமலைத்தீபம்*

# மறைக்கல்வி நடுநிலைய செயற்பாடுகள் பங்குனி – வைகாசி வரை

- பங்குனி 8ஆம் திகதி மறையாசிரியர் தேர்வு 1,2,3 இற்கான பரீட்சை ஆயத்த கருத்தமர்வு காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரை மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும்.
- பங்குனி 22ஆம் திகதி மறையாசிரியர்கள் ஆயருடனான கலந்துரையாடல். மற்றும் மறையாசிரியர்களுக்கான தவக்காலத்தியானம் காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 2.00 மணி வரை. வாகன ஒழுங்கும் மதிய உணவும் தயார் செய்யப்பட்டுள்ளதால் தவறாது கலந்து கொள்ளவும்.
- சித்திரை 9,10ஆம் திகதிகளில் கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பாசறை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறும். இடம் பின்னர் அறிவிக்கப்படும்.
- வைகாசி 3,4 சிங்கள மறையாசிரியர்களுக்கான றாகம வதிவிடப் பயிற்சி கருத்தமர்வு.
- வைகாசி 10 A/L மாணவர்களுக்கான ஆயத்த வகுப்பு.
- வைகாசி 24 மறைமாவட்ட விவிலிய வினாவிடைப் போட்டி.
- வைகாசி 31 இளையோர் மறைப்பாடசாலை இறுதிப்பரீட்சைக்கான ஆயத்த வகுப்பு. காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும்.

# திருப்பாலத்துவ மறைபரப்பு ஞாயிறு சிறப்புத் திருப்பலியும் சின்னஞ்சூட்டுதல் மற்றும் தீப்பாசறை நிகழ்வுகளும்



குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் 09.02.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 7.15 மணியளவில் திருப்பாலத்துவ மறைபரப்பு ஞாயிறு சிறப்புத் திருப்பலி பங்குத்தந்தை அருட்பணி. ஜுட் ஜோன்சன் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் போது திருப்பாலத்துவ சபை பிள்ளைகளுக்கான சின்னஞ்சூட்டுதல் நிகழ்வும் இடம்பெற்றது. இந் நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி. ரொய்ஷன் ஸ்பாக்ஸ் அவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து மாலை 5.30 மணியளவில் எமது பங்குத்தந்தையின் வழிகாட்டலில் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களினால் தீப்பாசறை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. “இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” எனும் கூற்றிற்கு அமைய எமது சிறுவர்கள் தங்களது திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பல நிகழ்வுகளில் ஈடுபட்டனர். இந்நிகழ்வானது எமது பங்குச்சமூகத்திற்கு புத்துணர்வு தரும் புதியதொரு அனுபவமாக அமைந்திருந்தது.



தகவல்: பங்கு மக்கள்

தடங்கலுக்கு மகிழ்கின்றோம்

# நில்–நிதானி–முன்னேறு

அருட்பணி - ஜுட் ஜோன்சன்

## இளையோர் பக்கம் 02

**முன்னேறு…**

**நிகழ்வு:**
உங்கள் கற்பனைக்கு கொஞ்சம் இடம்கொடுத்து, நீங்கள் மிகருசியான தேனீர் கோப்பை ஒன்றை சுவைக்கும்போது, ஒருவர் உங்கள் கையை தவறுதலாக தட்டிவிட, கோப்பையில் இருந்த தேனீர் தழும்பி வெளியே கொட்டுகின்றது என வைத்துக்கொள்வோம். தேனீர் வெளியே கொட்டுவதற்கு காரணம் யார்? உங்கள் கையை தட்டிவிட்ட நபரா? உண்மையில் என் கோப்பை தேனீருக்குப் பதிலாக பழரசம் நிறைந்திருந்தால், பழரசமே தழும்பி கொட்டியிருக்கும் என்பதால் எனது கோப்பை எந்த திரவத்தால் நிறைந்து உள்ளதோ, அதுவே வெளியே தழும்பி கொட்டும் என்பது ஒருவகைப் புரிதலாக அமையும்.

**படிப்பினை:**
நம் வாழ்வு எந்த பண்புகளினால் நிறைந்து உள்ளதோ அவையே நம் வாழ்க்கை நிகழ்வுகளால் அசைக்கப்படும்போது வெளிவரும் என்பது சாத்தியமான உண்மையாகும். என் வாழ்வு என்னும் கோப்பை அமைதி, மகிழ்ச்சி, நன்றி, தாழ்ச்சி என்னும் நற்பண்புகளால் நிறைந்திருக்குமானால், எச்சூழ்நிலையிலும் இவைகளே எம் வாழ்வில் வெளிப்படும். அதேபோல கோபம், வஞ்சனை, பழிவாங்கல் போன்ற நேர் எதிர்மறை பண்புகளால் நிறைந்திருந்தால், இவைகளே வெளிப்படும். அப்படியானால், இன்று எம் வாழ்வு என்னும் கோப்பையை நிரப்புவது எங்கள் கையிலேயே உள்ளது என்றால் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது என்பதே என் கருத்து. நம்



பலதரப்பட்ட உறவு நிலையில் எமது பதில்மொழிகளை (Response) கையாளும் சக்தி எம்மிடமே உள்ளது என்றால் பலருக்கு வியப்பாக தான் இருக்கும். மனிதனின் பகுத்தறியும் திறன் தான் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் தன் பொறுப்புணர்ந்து செயல்படுவதிலேதான் தங்கியுள்ளது. தனி மனிதனின் நடத்தை ஒவ்வொன்றும் அவரவர் ஆளுமையின் பிரதிபலிப்பிலே தங்கியுள்ளது. “என்னை கோபப்படுத்தி விட்டார்கள்” “என்னை கவலைக்குள்ளாக்கி விட்டார்கள்” என்று பலமுறை பலரும் குறைகூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் நம் எதிர்விளைவு செயல்பாடுகள் (Reaction) நம் ஆளுமையின் (Personality) அடிப்படையில் செயல்படுகின்றோம் என்பதே உண்மையாகும். ஒருவேளை எனது செயல்பாடுகளை கையாளும் திறன் அடுத்தவரிடமே உள்ளதாக எண்ணினால், என் ஆளுமையின் தரத்தை ஒருமுறை சுயஆய்விற்கு உட்படுத்திப் பார்ப்பது விரும்பத்தக்கது.



இக்கால இளையோரை சில குழுக்களோ அல்லது அரசில்வாதிகளோ குற்றச் செயல்களுக்கும், வன்முறை செயல்களுக்கும் பயன்படுத்திவரும் யதார்த்தம், நம் இளையோரின் சுய ஆய்வு திறனை கேள்விக்குறியாக்கியுள்ளது. சரியான பாதையில் முன்னேறிச் செல்வதற்கு சுய ஆய்வு எவ்வளவு முக்கியமானது என்பதை மெய்யியலாளர் சோக்கிரட்டீஸ் “உன்னையே நீ அறிவாய்” என்று இரத்தின சுருக்கமான மந்திரத்தை எப்போதே பதிவுசெய்துள்ளார்.

**நிகழ்வு:**
ஒரு மனிதனைப் பாம்பு தீண்டிவிட்டது என வைத்துக்கொள்வோம். இதை உணர்ந்த நபர், இருவகையில் உடனே செயல்பட வாய்ப்புகள் உண்டு. ஒன்று தன் உயிரைக் காப்பற்றிக் கொள்ள வைத்தியசாலைக்கு விரைந்து ஓடமுடியும். அல்லது தன்னை தீண்டிய பாம்பைத் தேடிப்போகவும், விசம் அவன் உடல்முழுவதும் பரவ, ஈற்றில் இறக்கவும் முடியும்.

**படிப்பினை:**
இதில் எனது தெரிவு என்ன என்பது எனது ஆளுமையின் தன்மையிலே அடங்கி இருக்கின்றது. தன்னை காப்பாற்றிக்கொள்வதில் உள்ள வேகம் தீமையை நன்மையால் வெல்லும் மேலான மனநிலையையும் மிக ஆரோக்கியமான மனநிலையாக கருதப்படுகின்றது. மாறாக, தீண்டிய அரவத்தை தாக்க வேண்டும் என்னும் நேர் எதிர்மறை மனநிலையுடன் தீமையை தீமையால் வெல்ல முயற்சிக்கும் பழிவாங்கல் செயலை எடுத்துரைக்கின்றது.

வாழ்வில் முன்னேற்றத்திற்கான தெரிவுகள் நம் கைகளில் உள்ளன. காலத்திற்கு ஏற்ற சரியான தெரிவுகளே, முன்னேறிச் செல்லும் பாதையை தீர்மானிக்கின்றன. வாழ்வில் வெற்றியாளர் என சாதித்தவர்களின் வாழ்க்கை வரலாறுகள் எங்களுக்கு கற்றுத்தரும் பாடம் “நடக்கத் துணிந்துவிட்டால், பாதங்கள் என்ன மறுக்குமா. பாதையே புதிதாய் பிறக்கும்” என்பதாகும். நம் முதல் தடைக்கல் “பயம்” (Fear)

**அடுத்த ஆக்கத்தில் ஒரு பொறிமுறையைக் கற்றுக்கொள்ளலாம். உங்கள் விமர்சனங்களை அனுப்பி வைக்கவும்.**

## படித்ததில் பிடித்தது

சேவியர் அந்தோனி சே.ச



# தானம்

சுவாமி…
முக்தி அடைய முக்கிய வழி என்ன?
ஊருக்குள் வந்திருந்த பெருந்துறவியிடம்
கேட்டு நின்றான்
பெரும் கஞ்சப் பணக்காரன் ஒருவன்.

'ஏழை எளிய அநாதைகளுக்கு
உன் சக்திக்கு ஏற்பத் தானம் செய்வாயாக!
அதுவே முக்தியடைய முக்கிய வழி!'

முடிவு செய்தான்.
தினமும் ஒரு கைப்பிடி அரிசியை
யாருக்காவது தானம் செய்தான்;
திருப்தியோடு தூங்கப் போனான்.

சிறிது நாட்கள் கழித்து…
அதே ஊருக்குத் திரும்ப வந்திருந்தார் அதே துறவி.
ஆல மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

தானமிட்டுச் சாதித்த கஞ்சன்
பெருமையோடு துறவியைச் சந்திக்க ஓடினான்:
'சுவாமி…
தினமும் ஒரு கைப்பிடி அரிசி
தானம் செய்து வருகிறேன்.
நான் முக்தியடைவேனா?'

கேட்டுக் கொண்டு நின்ற போது…
அங்கிருந்த மரத்தின் அடித்தூரை
நகத்தால் லேசாகச் சொறிந்து கொண்டிருந்தார் சுவாமி.

கஞ்சன் கேட்டதைக்
காதில் வாங்கிக் கொண்டது போல் தெரியவில்லை;
சொறிவதிலேயே கவனமாய் இருந்தார்.
'சுவாமி… நான் கேட்டேனே…
தாங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே!
நான் முத்தியடைவது உறுதியா?'

'இரு… இரு.
இந்த மரத்தைச் சொரிந்து சாய்த்துவிட்டுப்
பதில் சொல்கிறேன்.'

குழம்பிப் போனான் கஞ்சன்:
'மன்னிக்க வேண்டும் சுவாமி!
கோடாரியால் வெட்டினால் தானே மரம் சாயும்.
நகத்தினால் கீறி மரத்தைச் சாய்க்க நினைக்கிறீர்களே!
முடியுமா?'

சிரித்துக் கொண்டே கேட்டவனுக்கு
சொறிந்து கொண்டே பதில் சொன்னார் துறவி:
'ஏன் முடியாது?
ஒரு பிடி அரிசியை வைத்துச் சொர்க்கத்தை அடைய
நீ நினைக்கும் போது,
நகத்தால் கீறி இந்த மரத்தைச் சாய்க்க
நான் நினைக்கக் கூடாதா?'

**ஏது தானம்?**
**உபரியிலிருந்து கொஞ்சம் கொடுப்பதா?**
**உபரியையே கொடுப்பதா?**
**இருப்பதில் கொஞ்சம் கொடுப்பதா?**
**இருப்பதையே கொடுப்பதா?**

# உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக!

அருட்பணி : அ. அ. நவரெத்தினம் [நவாஜி]
சிரேஷ்ட் விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

இயேசுவின் இறைவேண்டலின் மூன்றாவது விண்ணப்பமாகிய 'உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக' என்பதனைக் குறித்து சிந்திக்கின்றபோது முதலில் எழுகின்ற இறையியல் வினாவானது யாதெனில்,'யாரது திருவுளம்?'என்பதாகும். அத்திருவுளம் நாமனைவரும் அறிந்ததுபோன்று இறைவனின் திருவுளமாகும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. அடுத்து எழுகின்ற மிகவும் முக்கியமான கேள்வி யாதெனில் உலகினில் பல்வேறு திக்குகளிலும் நாளாந்தம் நடக்கின்ற அநீதிகள், அக்கிரமங்கள், யுத்தங்கள், கொலைகள், கொள்ளைகள், மற்றும் பல்வேறுபட்ட பயங்கரவாதச் செயற்பாடுகளை நோக்குகின்றபோது கடவுள் எங்கே இருக்கின்றார்? அவரது விருப்பம் மண்ணகத்தில் நிறைவேறுகின்றதா? என்பதாகும். இவ்வாறான அநீத செயற்பாடுகள் இறைவனின் பிரசன்னத்தை உலகிலிருந்து அகற்றுவதுடன், அவரது விருப்பம் உலகினில் கிடையவே கிடையாது என்கிற துர்ப்பாக்கியமான நிலையினைத் தோற்றுவிக்கிறது.

நாம் வாழ்கின்ற இவ்வுலக வாழ்வானது கடவுள் மற்றும் அலகை என்கிற இருவகையான நிலைகளுக்கிடையிலான போட்டியாகும். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் இயேசுவிடம் வருகின்ற பணக்கார வாலிபன் 'நிலைவாழ்வினைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டுமென்கிற' வினாவினை முன்வைக்கின்றான். அவனுக்கு பதிலாக 'கட்டளைகளைக் கடைப்பிடி' என்கிறார். அவனும் பதிலுக்கு 'சிறுவயது முதலே இவற்றைக் கடைப்பிடிக்கிறேன்' என்கிறான், இயேசுவும் அவனிடம் 'உனக்குள்ளதெல்லாம் ஏழைகளுக்கு கொடு, பின்னர் வந்து பின்பற்று' என்கிறார். அவன் முகவாட்டத்துடன் அவ்விடம் விட்டு அகன்றான் என்கிறது விவிலியம் (காண்க: மத்தேயு 19: 16 – 24). இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதானது கிடையாது. உலகத்தின் வாழ்வினை துறக்காதவரை கடவுளின் விருப்பம் மனித வாழ்வில் நிறைவேறுவது அல்லது நிறைவேற்றப்படுவது அவ்வளவு சுலபமானதாக இருக்காது. ஆங்கிலக் கவிஞன் ஜோன் மில்ரன் (John Milton) தனது படைப்பாகிய 'இழந்த இன்பவனம்' (Paradise Lost) எனும் தொகுப்பில் மனித வாழ்வின் போராட்டம் குறித்து விளக்கின்றார். கடவுளின் அருள்வரத்தினைப் பெற்ற மானிட உலகானது வெறுப்பு, பகைமை, சண்டையில் வாழ்கிறது. தம்மிடையே குரோதம், உலகினையே அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு தமது மாண்பினை இழக்கிறது என்கிறார்.

எவ்வாறு விண்ணகத்தில் வானதூதர்களும், புனிதர்களும் கடவுளின் திட்டத்திற்கு மகிழ்வோடும், ஒற்றுமையோடும் கீழ்ப்படிகின்றார்களோ அவ்வாறே மண்ணுலகத்திலும் மனிதர்களும் அதனை செயற்படுத்த அழைக்கப்படுகிறார்கள். சுருங்கக்கூறின் இறைவனின் திருவுளத்திற்கு சரணாகதியாக அழைக்கப்படுகிறோம்.

இரண்டாவதாக இறைவனின் திட்டத்துடன் துடிப்பாக ஒத்துழைக்க வேண்டும். நீதி, அன்பு, இரக்கம் மண்ணகத்தில் நிலைத்தோங்க இறைவனின் திருவுளத்துடன் இணைந்து செயற்பட நம்மையே அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். இறைவனின் அரசினை இம்மண்ணகத்தில் கட்டியெழுப்ப அவரோடு ஒன்றிணைந்து விண்ணகக் கீழ்ப்படிதலை நற்செய்தி விழுமியங்களை நம் வாழ்வில் வாழ முயலவேண்டும்.

மூன்றாவதாக, நிச்சயமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இவ்வேண்டுதல் நமக்கு நினைவுறுத்துவது யாதெனில் குழப்பங்கள் மற்றும் துன்பங்கள் மத்தியிலும் கடவுளின் திட்டம் நமது நிலையான (நிறைவான) நன்மைத்தனத்திற்குரியது என்பதில் நம்பிக்கை கொள்ள அழைக்கிறது. அதுமட்டுமல்லாது நமக்கான கடவுளின் திருவுளமானது நாம் கற்பனைசெய்து பார்ப்பதைவிட மேலானது என்று நம்பிக்கைகொள்ள அழைக்கிறது.

நான்காவதாக, தூய வாழ்விற்கான அழைப்பினை விடுப்பதுடன், விண்ணகத்தை மண்ணகத்தில் பிரதிபலிக்க அழைக்கிறது. கடவுளின் திட்டமானது முழுமையாகவும், நிறைவாகவும் செயற்படுத்தப்படுவதற்கு விண்ணகம் எவ்வகையில் உயர்ந்த மாதிரியாக உள்ளது என்பதனை இச்சொற்றொடர் விளக்கி நிற்கிறது. நமது உறவு நிலைகளிலும், குடும்பங்களிலும், சமூகங்களிலும், பங்குகளிலும் அன்பு, அமைதி, தூய்மை போன்றவற்றை வாழ்வதன் வாயிலாக விண்ணகத்தை மண்ணகத்தில் செயற்படுத்த அழைத்து நிற்கிறது.



ஐந்தாவதாக, இம்மாற்றத்தினை நாடிநிற்கின்றபோது, இம்மாற்றம் இறைவேண்டலின் வாயிலாக நிறைவேற அழைக்கப்படுகிறோம். 'உமது திருவுளம் நிறைவேறுக' என்று செபிப்பதன் வாயிலாக நாம் நம்மையே கடவுளின் திட்டத்திற்கு விட்டுக் கொடுக்கிறோம். அதாவது, எங்களது இதயங்களை உமது விருப்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளும் என்றும் எங்களையே மாற்றிக்கொள்ளவும் அழைக்கப்படுகிறோம். இச்செபமானது ஆன்மிக முதிர்ச்சியில் வளர கற்றுத்தருவதுடன், நமது திட்டத்திற்கு கடவுளை வளைப்பதை விடுத்து, நாம் அவரது திருவுளத்திற்கு நம்மைக் கையளிக்கத் தேவையான கீழ்ப்படிதலை நம் எல்லோருக்கும் கற்றுத் தருகிறது.

நிறைவாக,'உமது திருவுளம் விண்ணகத்தில் நிறைவேறுவது போல மண்ணகத்திலும் நிறைவேறுக' என்று மன்றாடுவதானது, கடவுளின் நன்மைத்தனத்தில் நம்பிக்கை வைத்து, மண்ணகத்தில் விண்ணகத்தை அடைவதற்காக தெய்வீக திருவுளத்துடன் இணைந்து வாழ்வதற்கான உன்னதமான உயரிய அழைப்பாகும். இவ்வழைப்பானது நம்பிக்கையாளர்கள் அனைவரையும் இறைவனில் சரணாகதி அடையவும், அவரில் நம்பிக்கை கொள்ளவும் சவாலுக்குட்படுத்துவதுடன், அவரது திட்டத்திற்கு வாழ்வின் எல்லா நிலைகளிலும் முழுமையாக ஒத்துழைப்பு நல்கவும் மனிதர்களாகிய நம்மை அழைத்து நிற்கிறது.

கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி நூல் கேட்பது போன்று உலக வாழ்வில் கடவுளுடைய மீட்புத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக மாந்தர் அனைவருமே அவர்களது திட்டத்தை இறைமகன் இயேசுவுடன் இணைக்குமாறு தந்தையாம் இறைவனிடம் கேட்கிறோம் (க.தி.ம. எண்: 2860) என்று பகர்கின்றது. மனித வாழ்வின் நோக்கமெல்லாம் இறைவனின் திருவுளத்தை வாழ்வில் அறிந்து செயற்படுத்துவதன் வாயிலாக மண்ணகத்தை விண்ணகத்தைப் போன்று மாற்றுவதேயாகும். எனவே மாந்தர் நமது அழைப்பினை அறிவோம், கடவுளின் திருவுளம் வாழ்வில் நிறைவேற அனுதினமும் மன்றாடுவோம், அதற்காக நம்மையே உவந்தளிப்போம்.

**ஆயரின் செய்தி தொடர்ச்சி...**

யூபிலி ஆண்டு பல நிலையினருக்குமான ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 24, 25, 26 சமூகத் தொடர்பாடலின் யூபிலியாகும். இதில் மறைமாவட்ட இயக்குனர் அருட்பணி X.I. ரஜீவா வேண்டிய ஆயத்தங்களை செய்திருந்தார். இதன்படி 24ஆம் திகதி 100 மாணவர்களுக்கான கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்றது. 25ஆம் திகதி பேராலய மண்டப கட்டடத்தின் ஒரு பகுதியில் சமூகத் தொடர்பாடல் பணிகளுக்கான படப்பிடிப்புக் கூடம் திறந்து வைக்கப்பட்டது. 26ஆம் திகதி ஞாயிறு சமூகத் தொடர்பாடல் ஞாயிறாக அனைத்துப் பங்குகளிலும் சிறப்பிக்கப்பட்டது.

யூபிலி ஆண்டில் பல செயல்திட்டங்கள் வகுக்கப் பட்டிருந்தாலும், அதன் அடிப்படை நோக்கை நாம் மறந்துவிடக்கூடாது. இறைவனுக்கும் எனக்கும் உள்ள உறவு மிகவும் நெருக்கமாக வளர சிறந்த காலமிது. இவ்வருடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள விசேட வழிபாடுகள், திருயாத்திரைகள், இவ் உறவு வளர உதவிடும். மார்ச்மாதம் 5ஆம் திகதி முதல் தவக்காலத்தினுள் நாம் நுழைகின்றோம். 'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' அல்லது 'மனிதனே மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்' எனும் வார்த்தைகளுடன் நெற்றியில் சாம்பல் பூசி தவக்காலத்தைத் தொடங்குகின்றோம். இயேசு முற்றுமுழுதாக தன்னைத் தாழ்த்தி, சிலுவையில் தன்னை அர்ப்பணித்தார். தாழ்ச்சி நிறைந்த வாழ்வு வாழ எமக்கு சவால் விடுக்கும் காலமாக தவக்காலம் அமைந்துள்ளது. செபம், ஒறுத்தல் முயற்சிகள், இரக்கச் செயல்கள், பாவ மன்னிப்பு, ஒப்புரவு அருட்சாதனம் போன்றவை இக்காலத்தில் நாம் பயன்படுத்தும் சொற்களாகும். இவ்வருட தவக்காலத்தை நாம் ''மீண்டும் ஒரு தவக்காலம்'' எனக் கருதாமல் அருளின் காலமாக, இறைவனோடும், அடுத்திருப்பவரோடும் ஒப்புரவாகும் காலமாக பயன்படுத்துவோம்.

விவிலியத்தில் இறைவன் அனைத்துக் கட்டளைகளையும் சுருக்கி இரண்டு சட்டங்களாகத் தந்துள்ளார். 'கடவுளை அன்பு செய்வது, அடுத்திருப்பவரை அன்பு செய்வது.' இந்த யூபிலி ஆண்டில் இவ்விரு கட்டளைகளையும் உணர்ந்து நிறைவேற்ற முன்வருவோம். இறைவனை அன்பு செய்து, ஒப்புரவாகி அவர் விருப்பம் அறிந்து செயல்பட முன்வரும்போது அவரில் எமக்குள்ள அன்பை வெளிப்படுத்துகின்றோம். அதேபோல அடுத்தவர் அனுபவிக்கும் துன்பங்களிலும் போராட்டங்களிலும் நாம் சிறிதேனும் பங்கேற்று, அவர்களுக்கு ஆறுதலாக இருந்து செயல்படும்போது, எமது அன்பை வெளிப் படுத்துகின்றோம். 'கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண்முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத, கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது'' (1யோவா 4:20). இதை உணர்ந்து செயல்பட்டு எமக்குள்ளும் எம் சமூகத்தினுள்ளும் மாற்றத்தைக் கொண்டு வருவோம்.

இந்த யூபிலி ஆண்டில் நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நல்ல முயற்சிகளும் வெற்றி பெற இறையாசீர் வேண்டுகின்றேன்.

இறையாசீர் எப்போதும் உங்களோடு இருப்பதாக.

**திருமலை மறைமாவட்ட ஆயர்**

**2025 ஆம் யூபிலி ஆண்டிற்கான மேய்ப்புப்பணி மடல் தொடர்ச்சி...**

*16வது உலக ஆயர்கள் மாமன்ற அமர்வுக்காக ஒரே திருஅவையாக அனைவரும் சிந்தித்து கடந்த ஆண்டின் நிறைவில் அதன் இறுதி ஆவணம் வெளியிடப்பட்டது. திருஅவையாக அனைவரும் இணைந்து செயற்படுதல் அதன் பிரதான கருப்பொருளாகும். அதற்குத் தேவையான மனமாற்றமும், புதுப்பித்தலும் சகல மட்டங்களிலும் நிகழவேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. விவிலியத்தில் குறிப்பிடப்படும் யூபிலி ஆண்டின் நோக்கமும் இதுவே. யூபிலியில் நிலத்திற்கு விடுதலை, நிலங்களை மீளவும் கையளித்தல் - இன்றைய சுற்றுச்சூழலில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான வதிவிடம், அடிமைகளுக்கு விடுதலை - இன்றைய மக்களுக்கான சுதந்திரமான நடமாட்டம், கடன்களுக்கு மன்னிப்பு – வறிய நாடுகளின் கடன்களை மன்னித்தல், அனைவரையும் சகோதரப்பாங்கில் அரவணைத்தலுமாகும்.*

*1300ஆம் ஆண்டு முதல் திருத்தந்தை எட்டாம் பொனிபஸ் யூபிலி ஆண்டை திருஅவையில் தொடங்கி வைத்தார். பழைய ஏற்பாட்டின்படி இஸ்ரயேலரினுடைய வாழ்வில் யூபிலி ஆண்டு 50 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கொண்டாடப்பட்டாலும், திருத்தந்தை இரண்டாம் பவுல் 1470இல் திருஅவையில் 25 ஆண்டுகளுக்கு ஒரு தடவை யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தினார். அதன் முதலாவது யூபிலியானது 1475இல் திருத்தந்தை நான்காம் சிக்ஸ்டஸ் அவர்களால் சிறப்பிக்கப்பட்டது.*

இன்று எமக்கு ஆசீராகக் கிடைத்த யூபிலி ஆண்டை எவ்வாறு நாம் பயனுள்ளதாகவும் அர்த்தமுள்ளதாகவும் மாற்றலாம் என சிந்தித்து திட்டங்களை வகுத்து மறைமாவட்ட மட்டத்தில் செயல்படுவோம். யூபிலி ஆண்டின் செயல்பாடுகள் குறித்து அருள்பணியாளர்கள் மட்டத்தில் பல கலந்துரையாடல்கள் நடைபெற்றன. பங்குத் தந்தையர்களும், ஆணைக்குழு இயக்குனர்களும், அப்போஸ்தலிக்க சபைகளின் ஆன்மீக இயக்குனர்களும் யூபில் ஆண்டிற்கான தமது திட்டங்களையும் வகுத்துள்ளார்கள்.

**ஆன்மீகம்**

யூபிலி ஆண்டில் இறை – மனித உறவை வளர்க்கவும், மனிதருக்கும் நிலத்திற்கும் ஓய்வு கொடுக்கவும், அடிமைத்தளைகளை அகற்றவும் அதிக முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதேபோல திருத்தந்தையும் இறை – மனித உறவை வளர்க்க மேற்கொள்ள வேண்டிய முன்னெடுப்புக்களைக் குறிப்பிடுகின்றார். இதனடிப்படையில் அருள்பணியாளர்கள் இருபால் துறவியர், பொதுநிலை நம்பிக்கையாளர்களென பல தரப்பில் உள்ளவர்களுக்குமான கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை இவ்வருடம் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். இவற்றைப் பங்குத் தந்தையர்களும் ஆணைக்குழு இயக்குனர்களும் தமது வழிநடத்தலுக்கு உட்பட்டுள்ள பொதுநிலை நம்பிக்கையாளர்களும் ஒழுங்கு செய்வார்கள். அனைவரும் இச்சந்தர்ப்பங்களை முழுமையாகப் பயன்படுத்தி ஆன்மீகத்தில் வளரவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

தனி மனதராக இறைவனிடம் நெருங்கிவர இவ்வருடத்தை நாம் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வோம். இதற்கென ஆலயம், நற்கருணை சிற்றாலயம், தனிமையான சூழ்நிலை போன்றவை எமக்கு சாதகமாக உள்ளன. விவிலிய வாசிப்பு, திருப்பலி, திருவழிபாடுகள், பக்தி முயற்சிகள் போன்றவை இறை – மனித உறவை வளர்க்க சிறந்த வழிகள். இறைமக்கள் செபிக்கவும், தியானத்தில் ஈடுபடவும் உரிய சூழ்நிலையை பங்குத் தந்தையர்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

அதேபோல குடும்பமாக செபமாலை செபித்தலும், விவிலிய வாசித்தலிலும் ஈடுபடுவது மேலும் சிறந்தது. 'செபிக்கும் குடும்பம் நிலைக்கும் குடும்பம்.' குடும்ப செபத்திற்குப் பெற்றோர் மேற்கொள்ளும் முயற்சிகள் பிள்ளைகளுக்கு பெரும் ஆசீராகவே அமையும். அத்துடன் திருத்தந்தையின் புதிய சுற்றுமடலாகிய 'அவர் நம்மை அன்பு செய்கிறார்' என்பதற்கொப்ப இல்லங்களில் திரு இருதய அரசினை நிறுவி குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்வோம்.

அயலிலுள்ள குடும்பங்களாக இணைந்து அன்பியங்களைக் கட்டியெழுப்புதல்,நம்பிக்கையாளர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும் சான்று பகர்வுக்கும் பேருதவியாக இருக்கும். எனவே அன்பியங்களைக் கட்டியெழுப்புவதில் அதிக அக்கறை செலுத்துவோம்.

வழமைபோல பங்குமட்டத்தில் திருவழிபாட்டுக் கால வழிபாடுகள், திருப்பலிகள், ஆராதனைகள், ஆலயத் திருவிழாக்களென பங்குச் சமூகமாக நாம் சிறப்பிப்பதுண்டு. பங்கு மக்களின் ஆன்மீக நலன் கருதி இவ்வழிபாடுகளை மெருகூட்டி மேலும் அர்த்தம் உள்ளதாக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

மறைக்கோட்ட ரீதியிலும் மறைமாவட்ட ரிதியிலும் நடைபெறும் திருவழிபாட்டு நிகழ்வுகளை மேற்பார்வை செய்து மக்களுக்கு ஆன்மீக ரிதியில் பயனுள்ளதாக மாற்றுவது ஆயராகிய எனது கடமையாகும். ஆயராக நான் பங்கு மட்டங்களில் நம்பிக்கையாளர்களை சந்தித்து அவர்களது ஆன்மீக வாழ்வுபற்றி கலந்துரையாடி உற்சாகப்படுத்தி வருகின்றேன்.

**திருப்பயண (திருத்தல) மையங்கள்**

எமது மறைமாவட்டத்தில் புனித லூர்து அன்னை திருத்தலம் பாலையூற்று, புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம் சின்னக்கடை, இறை இரக்கத் திருத்தலம் அலஸ்தோட்டம் என மூன்று திருத்தலங்கள் அமைந்துள்ளன. இவற்றை புனிதமும், வரவேற்பும், பாதுகாப்பும் நிறைந்த இடங்களாக மாற்ற வேண்டியது பங்குத் தந்தையர்களின் கடமை. இதற்கு பங்குமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம். இம் முயற்சிக்கு மறைமாவட்டத்தினுடைய உதவியும் உண்டு.

திருத்தலங்களில் அனைத்துப் பங்குகளிலிருந்தும் நம்பிக்கையாளர்கள் தனித்தோ, குடும்பமாகவோ, குழுவாகவோ, பங்காகவோ ஆன்மீகக் காரியங்களில் ஈடுபட அழைக்கின்றோம். ஒப்புரவு அருளடையாளம், நற்கருணை ஆராதனை, சிறப்புத் திருப்பலிகள் மற்றும் ஆன்மீக உரைகள் வழங்க அருட்பணியாளர்கள் தம்மை ஆயத்தம் செய்கிறார்கள். மக்கள் இத்திருத்தலங்களின் நிர்வாக அருள்பணியாளர்களைத் தொடர்பு கொண்டு வழிபாடுகளை ஒழுங்கு செய்யலாம். அதேபோல ஏனைய ஆலயங்களிலும் இதுபோன்ற வசதிகள் மக்களுக்குத் தேவையெனில் பங்குத் தந்தையர்கள் எம்மை அணுகலாம். உள்ளம் உடைந்தோரைக் குணமாக்கவும் பல்வகையாகக் கட்டுண்டோருக்கு விடிவைக் கொக்கவும் எமது ஆன்மீக முயற்சிகள் வெற்றியளிக்கட்டும்.

**சமூகப் பணி**

தேவையில் இருப்போரை இனம்கண்டு அவர்களுக்கு உதவுவது எமது கடமை, எமது பணி. இல்லங்களில் திரு இருதய அரசை நிறுவுவதன் வாயிலாக அவரது இதயத்திலிருந்து பிறக்கும் பிறரன்பானது நாம் வாழும் சமூகத்தில் பொருள் காணவேண்டும் என்பது திருத்தந்தை பிரான்சிஸ் சிறப்பாக யூபிலி ஆண்டில், நாமும் ஏழைகள் மட்டில் அதிக அக்கறை செலுத்தி அவர்களுக்கு உதவிட முன்வருவோம். இதற்கும் நாம் பங்குத் தந்தையர்களோடு உரையாடி பல திட்டங்களை வகுத்துள்ளோம். உரிய காலத்தில் இது நடைமுறைப்படுத்தப்படும். கல்வி, வாழ்வாதாரம், சுகாதாரம், மருத்துவம், நிவாரணப்பணிகள் போன்ற விடயங்களில் நாம் அதிக கவனம் செலுத்துவோம். அத்துடன் நமது சுற்றுச்சூழலைப் பேணுவதில் அதிக சிரத்தையுடன் கூடிய நல்ல முயற்சிகளில் அனைவரும் இணைந்து செயல்படுவோம். இதற்குப் பங்குகளில் சமூகப் பணிக்குழுக்கள் சிறப்பாக இயங்க வேண்டும். இம்முயற்சியில் கத்தோலிக்கர் மட்டுமல்லாது சகோதர சமயத்தவரையும் கருத்தில்கொண்டு உதவுவோம்.

யூபிலி ஆண்டு எமக்கும் எம்மைச்சூழவுள்ளவர்களுக்கும் பெரும் ஆசீராக அமையட்டும். இதற்கு நாம் அனைவரும் ஒரே இலக்கு, சிந்தனையோடு மறைமாவட்டத் திருஅவையாக செயல்படுவோம்.

இறுதியாக, திருஅவையின்பால் தாயன்போடு செயல்படும் மரியன்னையின் பரிந்துரையும், வழிகாட்டலும், தனதுயிரை துச்சமென எண்ணி சவால்கள் மத்தியிலும் பணிசெய்த இலங்கையின் திருத்தூதராகிய புனித யோசேப்வாஸ் அடிகளாரின் சான்றும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் வழிநடத்த வேண்டி நிற்கின்றோம்.

**கிறிஸ்துவில் என்றும் அன்புடன்,**

+ N. Emmanuel

பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்,
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.
10-01-2025

எதிர்நோக்கின் அடிப்படையில் திருத்தூதரான புனித பவுல் உரோமை திருஅவைக்கு ஊக்கமூட்டும் இவ் வார்த்தைகளை பலப்படுத்துகின்றார். "எதிர்நோக்கு" 2025ம் ஆண்டு யூபிலி ஆண்டின் பிரதான கருப்பொருளாகும். பாரம்பரிய மரபின் அடிப்படையில் திருத்தந்தை அவர்கள் ஒவ்வொரு 25 வருடங்களுக்கு ஒரு முறை யூபிலி ஆண்டை பிரகடனப்படுத்துவார். அதற்கமைய இப் புனித ஆண்டை அனுபவிக்க உரோமை நகரை நோக்கி வருகைதரும் "எதிர்நோக்கின் திருப்பயணிகளையும்" மற்றும் திருத்தூதர்களான புனித பேதுரு மற்றும் புனித பவுல் ஆகியோரின் திருநகரைக்காண செல்லாவிட்டாலும் தங்களின் மறைமாவட்ட திருஅவைகளில் உள்ள ஆலயங்களில் இப்புனித ஆண்டை கொண்டாடும் அனைவர் பக்கமும் என் எண்ணம் திரும்புகின்றன. அனைவருக்கும் இவ் யூபிலி இறைவன் இயேசுவோடு உண்மையான தனிப்பட்ட சந்திப்பின் தருணமாக இருக்கும் என நம்புகின்றேம். அவரே எம் மீட்பின் வாயில் எல்லோருக்கும் திருஅவை பறைசாற்றுகின்ற எம் 'எதிர்நோக்கு' (1திமோ 1:1) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். நாம் இப்போது அருள்நிலையைப் பெற்றிருக்கின்றோம். இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால் தான் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. கடவுளின் மாட்சியில் பங்குபெறுவோம் என்னும் எதிர்நோக்கில் நாம் பெருமகிழ்வு கொள்ள முடிகிறது. அந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது." (உரோ 5, 1-2. 5) இவ் இறைவார்த்தைப் பகுதியில் எம்மை சிந்திக்க இடமளிக்கிறார்.

புனித பவுல் உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகமானது அவருடைய நற்செய்திப் பணியின் ஒரு தனித்துவமான திருப்புமுனையைக் குறிக்கின்றது என்பதனை நாம் அறிவோம். அதுவரை உரோமைப் பேரரசின் கிழக்குப் பகுதியில் தனது பணியினை முன்னெடுத்துச் சென்ற இவர் தற்போது உரோமை பற்றிய உலகின் பார்வையை திருப்புகிறார். வருவதற்கு அவர் அங்கு விரைந்து செல்ல தூண்டப்பட்டார்.

எதிர்நோக்கு சிலுவையில் தொங்கிய இயேசுவின் குத்தித் திறக்கப்பட்ட இதயத்திலிருந்து வழிந்தோடிய அன்பிலிருந்து பிறக்கிறது. "ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்." (உரோ. 5,19) திருமுழுக்கில் ஆரம்பித்து கடவுளின் அருளின் வெளிப்பாட்டில் உருவாகி தூய ஆவியின் செயற்பாட்டினால் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படும் எதிர்நோக்கினால் உயிர்ப்பிக்கப்படும் நாம், எம் தனிப்பட்ட நம்பிக்கை வாழ்வில் நாம் ஏற்புடையவர்கள் என்னும் வாழ்வு வெளிப்படுகிறது.

பயணிக்கும் திருஅவையின் வாழ்க்கையில் வற்றாத உடனிருப்பின் மூலம் தூய ஆவியானவரை அனைத்து நம்பிக்கையாளர்களையும் எதிர்நோக்கின் ஒளியில் ஒளிரச் செய்கின்றார். அதே ஆவியார் அந்த ஒளியை எப்போதும் சுடர்விட்டு எரியும் விளக்கைப் போல எம் வாழ்வைத் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகின்றோம். ஏனெனில் சாவோ, வாழ்வோ, வானதூதரோ, ஆட்சியாளரோ, நிகழ்வனவோ, வருவனவோ, வலிமை மிக்கவையோ, உள்ளத்தில் உள்ளவையோ, ஆழத்தில் உள்ளவையோ, வேறெந்தப் படைப்போ நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மை பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை" (உரோ 8, 35. 37 – 39) இவ் அசையாத எதிர்நோக்கு சோதனைகள் மத்தியிலும் நிலைத்திருப்பதற்கான காரணத்தை நாம் காணலாம். நம்பிக்கையின் அடிப்படையில் அன்பில் ஊட்டம் பெறுவதால் எதிர்நோக்கு வாழ்க்கையில் முன்னேற நமக்கு உதவுகிறது. புனித அகுஸ்தினார்! "நமது வாழ்க்கை நிலை எதுவாக இருந்தாலும் ஆன்மாவில் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றும் இல்லையெனில் நாம் வாழமுடியாது" என்று கூறுகின்றார்.

புனித பவுல் ஒரு எதார்த்தவாதி. வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் உண்டு என்பதையும் சோதனைகளுக்கு மத்தியில் அன்பு

# "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது"

**(Spes Non Confundit)** *(உரோ 5: 5)*



எதிர்நோக்கு என்றால் என்ன என்பது அனைவரும் அறிந்ததொன்று ஒவ்வொருவரின் இதயத்திலும் எம் எதிர்காலம் எதனைக்கொணரும் என்பதை நாம் அறியாவிட்டாலும் வரவிருக்கும் நன்மைகளின் ஆவலாக எதிர்பார்ப்பாக இவ் எதிர்நோக்கு திகழ்கின்றது. எனினும் எதிர்காலம் பற்றிய உறுதியற்ற நிலை சிலவேளைகளில் எதிர்மறையான உணர்வுகளை உருவாக்கலாம். நம்பிக்கையிலிருந்து அச்சத்தையும், அமைதியிலிருந்து பதட்டத்தையும், உறுதிப்பாடில்லாமல் தயக்கத்தையும் சந்தேகத்தையும் கொணர்கின்றது.

நாம் நாளாந்தம் எதுவும் மகிழ்ச்சியைத் தராது என எண்ணும், எதிர்காலம் பற்றிய ஊக்கமற்ற எதிர்மறையாக எண்ணும் நம்பிக்கை இழந்த பலரை சந்திக்கின்றோம். எனவே, நம் அனைவருக்கும் இவ் யூபிலி ஆண்டு எம் எதிர்நோக்கை புதுப்பிக்கும் ஒரு வாய்ப்பாக இருக்கட்டும். இவ் எதிர்நோக்கிற்கான காரணிகளை அறிந்து கொள்ள இறைவார்த்தை நமக்கு உதவுகின்றது. இதனை வழிகாட்டியாக பெற்றுக்கொண்டு திருத்தூதர் பவுல் உரோமைய திருஅவைக்கு அறிவிக்க விரும்பிய நற்செய்தியை அறிந்துகொள்வோம்.

**1. எதிர்நோக்கின் சொல் வார்த்தை**

"ஆகையால், நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகியுள்ள நாம், நம் அவர் முகம்கொடுத்த சவாலை நற்செய்திப் பணிக்காக ஏற்றுக்கொண்டார். அது அவருக்கு தடையாக இடராக அமையவில்லை. உரோமை திருஅவை பவுலினால் உருவாக்கப்படவில்லை எனினும் சிலுவையில் அறையப்பட்டு இறந்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியையும் முற்காலத்து இறைவாக்குகள் அன்பின் அடிப்படையில் நிறைவேறி மாட்சிக்கு வழிநடத்தும் எதிர்நோக்கின் செய்தியையும் அனைவருக்கும் கொண்டு தக்கவைக்கவும் ஊக்கமூட்டவும் வைக்கின்றார். எதிர்நோக்கு ஏமாற்றவோ, புறக்கணிக்கவோ இல்லை ஏனெனில் இறைவனிடமிருந்து எம்மை பிரிக்க முடியாத அன்பில் அடித்தளத்தை கொண்டுள்ளது. "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சவாலா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்" ஆயினும், நம்மேல் அன்பு கூர்ந்தவரின்

தமிழ் மொழிபெயர்ப்பு
**அருட்பணி . எமர்சன் றாகல்**

சோதனைக்குள்ளாக்கப்படுவதையும் எதிர்நோக்கு தளர்ந்து விடக்கூடும் என்பதனையும் நன்றாக புரிந்திருந்தார். எனினும் அவர், "துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலும் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். ஏனெனில் துன்பத்தால் மன உறுதியும், மன உறுதியால் தகைமையும், தகைமையால் எதிர்நோக்கும் விளையும் என அறிந்திருக்கிறோம்." என கூறுகிறார். (உரோ 5, 3-4)

தொடரும்...

# தவக்கால 40 நாட்கள்

அருட்சகோ. ச. விமல்ராஜ் அமதி

**திருவிவிலியத்தில் காணப்படுகின்ற 40 நாட்களுடன் தொடர்புடைய நிகழ்வுகள்**

திருவிவிலியத்தில் பழைய ஏற்பாடு தொடங்கி புதிய ஏற்பாடு வரை 40 என்ற எண்ணிக்கை தொடர்பில் பல நிகழ்வுகளையும் அனுபவங்களையும் கொண்டிருக்கின்றது. அவ்வாறான சில நிகழ்வுகள் பின்வருமாறு.

- நோவாவின் காலத்தில் 40 நாட்கள் இரவும் பகலும் மழைபொழிந்தது (தொ.நூ 7:12)
- இஸ்ராயேலர் ஆண்டவருடைய பார்வையில் தீயன செய்ததால் அவர்கள் பாலைநிலத்தில் 40 ஆண்டுகள் அலைந்து திரிய வேண்டி இருந்தது. (எண்ணிக்கை 32:13)
- மோசே 40 நாட்கள் சீனாய் மலையில் ஆண்டவரோடு இருந்தார். (வி.ப 34: 28-35)
- இறைவாக்கினர் யோனா 40 நாட்களில் நினிவே நகரம் அழிக்கப்பட்ட போகிறது என அறிவித்தார். (யோனா 3:1-10)
- எலியா 40 நாட்கள் இரவும் பகலும் நடந்து ஒரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார். (1 அரச 19:8)
- கோலியாத் 40 நாட்கள் காலையும் மாலையும் தன்னோடு போரிட வருமாறு இஸ்ராயலேருக்கு சவால் விட்டுக் கொண்டேயிருந்தான். (1 சாமுவேல் 17:16)
- நம் ஆண்டவர் இயேசு பாலைநிலத்தில் 40 நாட்கள் இரவும் பகலும் உண்ணா நோன்பிருந்தார். (மத் 4:1-11)

இவ்வாறாக 40 என்ற எண்ணிக்கையுடன் தொடர்புடைய பல நிகழ்வுகள் திருவிவிலியத்தில் காணப்படுகின்றன. அந்த வகையில் 40 என்ற எண் பல நாட்கள், அதிக நாட்கள், பல ஆண்டுகள் அல்லது அதிகமான ஆண்டுகள் என்ற சொற்பதங்களுக்கு பதிலாக ஒரு முழுமையான கால கட்டத்தை குறித்து அக்காலப் பகுதிக்குள் இடம் பெற்ற ஆன்மீக நிகழ்வுகளைப் பற்றி கூறுகின்றன. மேலும் திருவிவிலியத்தில் 40 நாள் அல்லது 40 வருடங்கள் என்னும் எண்ணிக்கையானது ஒரு சோதனை காலத்தையும் (Period of trial) பரிசோதனை காலமாகவும் (test) தயார்படுத்தும் காலமாகவும் (Preparation), ஒரு முழுமையான மாற்றத்தை கொண்டுவருகின்ற காலமாகவும் (Renewal and tramsformation) இருக்கின்றது.

**மோசேயும் 40 நாட்களும்**

விடுதலைப்பயண நூலின்படி, மோசே இரண்டு தடவைகள் 40 நாட்கள் ஆண்டவரோடு சீனாய் மலையில் இருந்தார் என காண்கின்றோம். முதலாவது தடவை ஆண்டவர் தாமே கட்டளைகள் அடங்கிய கற்பலகைகளை அளிப்பதற்காக மோசேயை சீனாய் மலைக்கு அழைப்பதனை பார்க்கின்றோம். (வி.ப 24:18) மோசே தங்களிடம் வர காலம் தாழ்த்துவதனை கண்ட மக்கள் பொற்கன்றினை செய்து, அதுதான் கடவுள் என வழிபட்டு பாவம் செய்வதனை கண்ட மோசே கோபம் கொண்டு ஆண்டவரிடமிருந்து பெற்ற கற்பலகைகளை உடைத்து பொற்கன்றையும் இடித்து தூளாக்கி மக்களுக்கு குடிக்க கொடுத்தார் எனவும் காண்கிறோம். (வி.ப. 32:20)

இவ்வாறு ஆண்டவரிடம் இருந்து பெற்ற கட்டளைகள் அடங்கிய கற்பலகை உடைந்து போனதால் மீண்டும் ஆண்டவர் மோசேயை சீனாய் மலைக்கு அழைத்து கட்டளைகளைக் கொடுக்கிறார். இந்த வேளையிலும் மோசே 40 நாட்கள் இரவும் பகலும் ஆண்டவருடன் இருந்தார். அந்த நாட்களில் அவர் அப்பம் உண்ணவுமில்லை தண்ணீர் பருகவுமில்லை என பார்க்கின்றோம். இவ்வாறாக ஆண்டவர் மோசேயை 40 நாள் நோன்பினூடாக தன்னுடைய கட்டளைகளை பெற அவரை தயார்படுத்தினார். ஆகவே இந்த 40 நாள் நோன்பு மோசேவுக்கு ஆண்டவரின் கட்டளைபெற தன்னை தயார் செய்யும் காலமாக (time of preparation) அமைந்திருந்தது. மேலும் அவர் ஆண்டவருடன் இருந்ததால் அவருடைய தோற்றத்திலும் மாற்றம் (transformation) உண்டானது என காண்கின்றோம். “மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிச் செல்கையில் உடன்படிக்கை பலகைகள் இரண்டையும் தம் கைகளில் தாங்கி கொண்டிருந்தார். மோசே கடவுளோடு பேசியதால் அவர் முகத்தோற்றம் ஒளிமயமாய் இருந்தது. ஆனால் மோசே அதை அறியவில்லை” (வி.ப 34:29).

இவ்வாறாக 40 நாள் ஆயத்தத்தின் பின்னர் கடவுள் தம் கட்டளைகளை கொடுக்கின்ற அதிசயமான நிகழ்வு நடைபெற்றது.

**கோலியாத்தும் 40 நாட்களும்**

முதலாவது சாமுவேல் நூலின்படி கோலியாத் என்னும் பெலிஸ்தியன் இஸ்ராயலேருக்கு எதிராக 40 நாள் காலையும் மாலையும் போர் முழக்கமிட்டான் எனவும், அவனது தோற்றத்தையும் அவனுடைய கையிலுள்ள ஆயுதங்களையும் கண்ட மன்னர் சவுலும் மக்களும் அவனுக்கு எதிராக போரிட பயந்து கலங்கி அச்சமுற்றனர் என விவரிக்கின்றது. (1 சாமுவேல் 17:1 – 16) ஆனால் அந்த 40 நாட்களுக்கு பின்னர் ஆண்டவர் தாவீது எனும் ஆடுகளை மேய்க்கும் இளைஞனை கொண்டு பெலிஸ்தியரை வெற்றி கொண்டு இஸ்ராயேல் மக்களை விடுவித்தார். இவ்வாறு கோலியாத்திற்கு அஞ்சி அவனுடைய ஏளன சொற்களையும் கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு 40 நாட்களுக்கு பின்னர் கடவுள் அவர்களுக்கு வெற்றியை கொடுக்கின்ற அதிசயமான நிகழ்வு நடைபெற்றது. இவ்வாறு 40 நாளிற்கு பின்னர் இந்த அதிசய நிகழ்வினை ஆண்டவரே தாவீதின் மூலமாய் செய்து முடித்தார்.

**எலியாவும் 40 நாட்களும்**

இறைவாக்கினர் எலியா தம்முடைய காலத்திலே, உண்மை கடவுளாகிய யாவே இறைவனை மறந்துவிட்டு பாகால் என்னும் கானானேய தெய்வத்தை வழிபட்ட மன்னன் ஆகாபுக்கும் அவனுடைய மனைவி ஈசபேலையும் மற்றும் மக்களையும் உண்மையான இறைவனை வழிபட சவால் விடுக்கும் இறைவாக்கினராக திகழ்ந்தார். உண்மையான கடவுள் யார் என நிரூபிக்கும் பொருட்டு பாகால் பொய்வாக்கினருக்கு சவால் விடுகின்றார். யாவே இறைவனுக்கும், பாகாலுக்கும் என்று தனித்தனியாக இருக்கின்ற பலிப்பீடங்களில் உள்ள பலியை விண்ணிலிருந்து நெருப்பை வரவழைத்து எரிக்க செய்யவேண்டும். யார் தம் மன்றாட்டினால் அவ்வாறு செய்கிறாரோ அவருடைய கடவுளே உண்மை கடவுள் என மக்கள் கண்டுணர்வார்கள். பாகால் பொய்வாக்கினரால் அவ்வாறு செய்ய முடியாது போகவே எலியா தம் மன்றாட்டினால் விண்ணிலிருந்து நெருப்பை வரவழைத்து முற்றுமாய் நனைந்திருந்த விறகுகளையும், பலியையும் எரியச் செய்தார். இவ்வாறு சவாலில் தோற்ற 450 பாகாலின் பொய்வாக்கினரை அவர் கொன்றொழித்தார் என வாசிக்கின்றோம். (1 அரசர் 18)

இதனால் கோபமடைந்த ஆகாவின் மனைவி ஈசபேல் எலியாவை கொலை செய்ய போவதாக அச்சுறுத்தவே எலியா உயிருக்கு பயந்து தப்பி ஓடுகின்றார். இவ்வாறு தப்பி ஓடுகின்ற அவர், பாலைவனத்தில் உள்ள ஒரு செடியின் கீழ் இருந்து கொண்டு தம் உயிரை எடுத்துவிடுமாறு ஆண்டவரிடம் மன்றாடிய பின்னர் படுத்துறங்கினார். இவ்வாறு பயந்து சோர்வுற்றிருக்கின்ற அவருக்கு ஊக்கமூட்ட கடவுள் தம் தூதரை அனுப்பி இரண்டு முறை உணவளித்தார். அந்த உணவினால் திடம் பெற்ற எலியா 40 நாள் இரவும் பகலும் நடந்து ஒரேபு என்கின்ற ஆண்டவரின் மலையை அடைந்தார் என காண்கின்றோம். நாற்பது நாளுக்கு பின்னர் ஒரேபு மலையை வந்தடைந்த எலியாவோடு ஆண்டவர் மெல்லிய ஒலியினூடாக பேசுகின்றார். அவரோடு பேசியது மட்டுமல்லாமல் அவர் செய்ய வேண்டிய பணிகளை சொல்லி அவரை வழி அனுப்புவதனை காண்கின்றோம். (1 அரசர்கள் 19)

இவ்வாறாக ஆண்டவர் எலியாவுக்கு தன்னை வெளிப்படுத்த 40 நாட்களும் ஆண்டவர் அவரை தயார்படுத்தினார். மோசேவுக்கு ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தியதனை போல, எலியாவுக்கும் 40 நாட்களின் பின்னர் ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துவதனை காண்கின்றோம். இவ்வாறாக அந்த 40 நாட்கள் ஆண்டவரை சந்திக்க தன்னை தயார்ப்படுத்தி கொண்ட நாட்களாக அமைந்தன.

**இயேசுவும் நாற்பது நாட்களும்**

இயேசு ஆண்டவர் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்ற பின்னர் பாலைநிலத்திற்கு தூய ஆவியால் அழைத்து செல்லப்பட்டார் என காண்கின்றோம். “அதன் பின் இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதற்காக பாலை நிலத்திற்கு தூய ஆவியால் அழைத்து செல்லப்பட்டார். அவர் 40 நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார்”. (மத் 4:1-2)



நம் ஆண்டவர் இயேசுவின் 40 நாள் நோன்பானது அவரது பகிரங்க பணிவாழ்விற்கான முன் ஆயத்தமாக இருப்பதோடு, பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட மோசே மற்றும் எலியாவின் 40 நாள் அனுபவத்தை இயேசு முழுமையடைய செய்து திருச்சட்டம் மற்றும் இறைவாக்கினர்கள் குறிப்பிட்ட அனைத்தும் இயேசுவில் முழுமையடைகின்றன என்பதையும் குறித்து காட்டுகின்றது. மேலும் ஆண்டவர் இயேசுவின் 40 நாள் பாலைநில அனுபவம் இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு செல்லும் முன்னர் பாலைநிலத்தில் சோதிக்கப்பட்ட நிகழ்வையும் பிரதிபலிக்கின்றது. இஸ்ரயேல் மக்கள் அந்த சோதனையில் தோல்வி அடைந்தார்கள் ஆனால் இயேசுவோ தாழ்மையாலும், கீழ்படிதலாலும் சோதனைகளை வென்றார்.

இயேசுக்கிறிஸ்து மூன்று தடவையும் சாத்தானின் சோதனைகளை இறைவார்த்தையின் துணை கொண்டு முறியடித்த பின்னர் “வானதூதர் அவருக்கு பணிவிடை செய்தார்” (மத் 4:11) என காண்கின்றோம். இவ்வாறு கடவுள் தம் பிள்ளைகளை என்றும் கைவிடுவதில்லை, சோதனைகளின் பின்னர் நம்மை தேற்றி அரவணைப்பார் என்ற ஆன்மீக உண்மைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

**முடிவுரை**

நமது வாழ்க்கையில் இந்த தவக்காலத்தின் 40 நாட்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என சற்று சிந்திப்போம்.

மோசே, எலியா மற்றும் நம் ஆண்டவர் இயேசுவை போல முடியுமானவர்கள் தமது சூழ்நிலைக்கும் உடல் நலத்திற்கும் தகுந்தாற்போல உண்ணா நோன்பிருந்து இறைவார்த்தையை வாசித்து, நற்கருணை ஆண்டவரை அடிக்கடி சந்திப்பதின் ஊடாக இறைஉறவிலும் பிறரன்பு பணிகளிலும் வளர முடியும். ஏனெனில் உண்மையான உண்ணா நோன்பு ஆண்டவரோடு கொண்டுள்ள உறவில் வளர வழிசமைக்கின்றது.

நாங்கள் அனைவரும் பாவிகளாக இருக்கின்றோம் (1யோவான் 8: 1). நம்மிடம் பாவம் இல்லை எனச் சொல்வோமாயின் நம்மையே நாம் ஏமாற்றி கொள்கின்றோம். அந்தவகையில் நாமும் ஒரு சில பாவத்திற்கு அடிமையாகி எங்களுடைய வாழ்வை தொலைத்தவர்களாக காணப்படலாம். அந்த பாவங்கள் கோலியாத்தை போல அச்சமூட்டி எங்கள் வாழ்க்கைக்கு சவாலாக மாறி நிற்கலாம். நாமும் தாவீதைப் போல ஆண்டவரின் கருணையிலும், இரக்கத்திலும் நம்பிக்கை உடையவர்களாக இந்த 40 நாட்களும் உண்ணா நோன்பிருந்து இறைவார்த்தையை வாசித்து இறைவனிடம் வேண்டுவதன் வழியாக அந்த பாவங்களை நாம் முற்றாக நம் வாழ்விலிருந்து அகற்றி விடுவதோடு, புதுப்பிறப்பு அடைந்த மனிதர்களாக கிறிஸ்துவின் பாஸ்கா விழாவை கொண்டாடத் தகுதி பெறுவோம்.

மேலும் நம்மில் பலர் தங்களது வாழ்க்கையில் முக்கியமான அடுத்த கட்டத்தை நோக்கிய பயணத்தில் இருப்பார்கள். அல்லது ஒரு நிரந்தரமான வேலை கிடைக்க வேண்டும் என காத்திருப்பீர்கள் அல்லது புதிதாக ஒரு தொழில் முயற்சியை தொடங்கியிருப்பீர்கள் அல்லது வருகின்ற காலங்களில் தொடங்க எண்ணியிருப்பீர்கள் அல்லது உங்களுடைய வாழ்க்கைக்கு நல்ல துணையை தேட ஆரம்பித்தவர்களாயும் இருக்கலாம். எந்த சந்தர்ப்பங்களாக இருந்தாலும் இந்த தவக்காலத்தின் 40 நாட்களையும் அந்த நோக்கத்திற்காய் இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து உண்ணா நோன்பிருந்து மன்றாடி தொடங்குவதனால் இறைஆசீரையும் வழிகாட்டலையும், பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஆரம்பம் ஜெபமாக இருந்தால் முடிவு ஜெயமாக இருக்கும்

மடல் – 06

மாண்புமிகு மாணவரே,
"எண்ணமே செயலின்
தொடக்கம் திட்டமிடல்
எல்லாச் செயலாக்கத்திற்கும்
முன் செல்கிறது. (சீரா 32:16)

மலர் மணத்தைச் சந்திப்பதுண்டு
வானம் நிலவைச் சந்திப்பதுண்டு
நிலம் நீரைச் சந்திப்பதுண்டு
கடல் கரையையும்
மயில் மேகத்தையும்
குயில் சோலையையும் சந்திப்பதுண்டு
இவை யாவும் அழகான சந்திப்புக்கள்

திருமலைத் தீபத்தின் வாயிலாக நானும் உங்களைச் சந்திக்க வந்துள்ளேன். எமது சந்திப்பு கல்வி பற்றியதாகவே இருக்கப் போகின்றது.

பழையன கழிதலும் புதியன புகுதலும் 2025ஆம் ஆண்டின் முதல் மாதமான தை மாதத்தில் நடந்தேறியுள்ளது. 2024ஆம் கல்வி ஆண்டு 2025 தை மாதம் 24ஆம் திகதி நிறைவடைந்தது. 2025 தை 27ஆம் திகதி திங்கட்கிழமை 2025ஆம் ஆண்டின் புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாகியது.

மூன்றாம் தவணைப் பரீட்சை முடிந்து பெறுபேறுகள் எல்லாம் கிடைக்கப் பெற்றிருப்பீர்கள். இப்போது புதிய வகுப்பில் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். ஆயினும் மூன்றாம் தவணையில் நீங்கள் பெற்ற புள்ளிகளை ஒரு முறை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள். சில பாடங்களில் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பீர்கள். சிலர் எல்லாப் பாடங்களிலும் குறைவான புள்ளிகளைப் பெற்றிருப்பீர்கள். இருப்பினும் நீயும் சித்தியடைந்து புதிய வகுப்பில் அமர்ந்திருப்பாய்.

நீ புள்ளிகள் குறைவாகப் பெற்றுவிட்டாய் என்று கவலைப்படுகிறாய். வாழ்க்கை வெறுத்து விட்டது என்று கலங்கிப் போய் நிற்கின்றாய். கவலைப்படாதே "நலிவுற்றோரின் ஞானம் அவர்களைத் தலைநிமிரச் செய்யும், பெரியார்கள் நடுவில் அவர்களை அமரச் செய்யும்." (சீரா 11:1) என்கின்றது திருவிவிலியம் உன் கல்வித் தேவையின் குறைகளை சரி செய்து கொள்ளவில்லை என்றால் நீ தன்னம்பிக்கை அற்றவன் ஆகிவிடுவாய் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் போய் விடும்.

புள்ளி இழப்புக்கள் தோல்விகள் அல்ல. துணிந்து நில் உன் எதிர்காலம் வெற்றிப்படிகளாக மாறலாம், மாறும். அதற்காக நீ செய்ய வேண்டிய ஒரு காரியம் உண்டு. அது தான் இயேசுவிடம் செபிப்பது. உன் கல்வியில் முன்னேற்றம் வேண்டி செபித்துப் பார். உனக்கு என்ன நடக்கும் என்பதை நீ உணர்வாய்.

- செபம் உன்னைப் பாதுகாக்கும்
- செபம் உனது நிலைகளை மாற்றும்
- செபம் உன்னை கடவுளிடம் அழைத்துச் செல்லும்

செபிப்பதனால் மேலே கூறப்பட்ட விடயங்களும் உன்னை திறமை மிகு மனிதனாக்கும். உன் மனதில் உறுதியை வளர்த்துக்கொள். என்னால் முடியும் என நம்பு. சாதிப்பேன் என வைராக்கியம் கொள். இலட்சியப் பாதையை அடைவேன் என திடசங்கட்பம் கொள் நிச்சயம் இலட்சியத்தை அடைவாய்.

நம் ஆண்டவர் இயேசுவை மனதில் வைத்துக்கொள். அவர் அன்புள்ளவர், அவர் நல்லவர், அவர் அற்புதர் அவருக்கு நன்றி கூற மறவாதே. இன்று முதல் நீ இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் ஆவாய். "நற்பயிற்சி பெற்று ஞானத்தை அடையுங்கள் அதைப் புறக்கணியாதீர்கள் (நீதிமொழி 8:33)

**ஜோ. நோமன் பல்தஸார், ஓய்வு நிலை அதிபர்**

## சமூகத்தில் சீர் திருத்தம் ஏற்படுத்துவோம்

இன்று வியாபாரம் என்ற பாங்கில் குழந்தைகள், இளம் சமுதாயம் ஒருவகையான வியாபாரிகளால் ஏமாற்றப்படுகிறார்கள். தவறான வழிகளில் வழிநடத்தப்படுகிறார்கள். கல்வியில் நாட்டம் கொள்ளாமல் இளமைப்பருவத்தை வீணாக்குகிறார்கள். அது மட்டுமல்ல வியாபாரிகளின் மாயைக்குள் விழுந்து தவறான பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிறார்கள். அத்துடன் பெரிய கடன் சுமைகளுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். இதனால் பிற்காலத்தில் தகுந்த வேலைவாய்ப்பு இல்லாமல் பல சிக்கலுக்குள்ளாகி இறுதியில் இந்த வியாபாரிகளின் கைக்குள் சிக்குகிறார்கள். இந்த வியாபாரிகள் அவர்களுடைய அன்றாடத் தேவைக்கு பணத்தை கொடுத்து அநேகமாக பணக்கார குழந்தைகளை இதற்கு பலிக்கிடாய் ஆக்குகிறார்கள்.

இதனை முன்னிட்டு சமூக சேவையாளர்கள் அல்லது சமுகத்தில் பொறுப்புள்ளவர்கள் இப்படிப்பட்ட வியாபாரிகளை அடையாளம் கண்டு அவர்களை சரியானவழியில் வழிநடத்துவதன் மூலம் அல்லது சரியான நிதி நிறுவனங்களிடம் ஒப்படைப்பதன் வழியாகவும் பெற்றோர் குழந்தைகளையும், இளம் சமுதாயத்தையும் சரியான முறையில் வழிநடத்தி அவர்களுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், இளம் சந்ததிக்கு சரியான வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாகவும் அண்மைக்காலங்களில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள விபரீத விளைவுகளை தடுக்கலாம்.

இப்படியான சிக்கலில் மாட்டுப்பட்ட இளம் சமுதாயம் பல தவறான முடிவுகளை எடுக்கிறார்கள். உதாரணமாக: களவு, வங்கி உடைப்பு, தற்கொலை, போதைப் பொருள் பாவனை, பெற்றோரை கொலைசெய்தல் இதை சமய ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ, அரச ரீதியாகவோ தடை செய்தல் மிகவும் முக்கியமானது.

**வில்லி ஆன்மேரி அந்தோனி**
**குவாடலூப்பே அன்னை திருத்தலம்**



தவக்காலத்தை நாம் ஆரம்பிக்கின்றோம். தவக்காலம் அருளின் காலம் எனவும், மனமாற்றத்தின் காலம் எனவும் திருஅவை நமக்கு படிப்பிக்கின்றது. கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாகி உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் உன்னத காலமாக இத்தவக்காலம் நமக்குத் தரப்பட்டிருக்கின்றது.

தவக்காலத்தில் பல்வேறு பக்தி முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன. அவற்றுள் உண்ணா நோன்பிருப்பதும் முக்கியமான ஒன்று இந்த நோன்பிருத்தலைக் குறித்து இங்கு நாம் சிந்திப்போம். நோன்பு என்பது உணவை மறுத்தல் ஆகும். காலம் காலமாகவே மதம், மொழி, கலாச்சாரம் கடந்து மனித இனம் முழுவதும் நோன்பிருக்கும் பழக்கம் பரவியுள்ளது. நோன்பிருத்தல் பல வழிகளில் மனிதருக்கு பலன் அளிக்கின்றது.

## தவக்காலத்தில் நோன்பின் மேன்மை

### பல்வேறு பார்வைகளில் நோன்பின் சிறப்பு

நோன்பின் சிறப்பை, அவசியத்தைப் பல்வேறு பார்வைகளில் நோக்க முடியும் மருத்துவப் பார்வையில் நோன்பு இருத்தல் பரிந்துரைக்கப்படுகிறது. வாரத்தில் ஒரு நாள் உணவை மறுப்பது உடலுக்கு நலம் தருகின்றது. ஓயாமல் உழைக்கின்ற உடலின் உள் உறுப்புகளுக்கு இந்த நோன்பு ஓய்வைத் தருகின்றது.

உளவியல் பார்வையில் உணவை மறுப்பது மனக்கட்டுப்பாட்டை வளர்க்க உதவுகிறது. நம் உணவுகளின்மீதும் செயற்பாடுகளின்மீதும் மனதுக்கு கட்டுப்பாடு தேவையெனில் அதை வளர்க்க பல முயற்சிகள் தேவை. அவற்றுள் ஒன்றுதான் நோன்பு, இந்த நவீன காலத்தில் இளையோர் மனக்கட்டுப்பாடின்றி மனம் போன போக்கில் வாழ்கின்றனர். குறிப்பாக மனதில் தோன்றும் ஆசைகளை உடனே அடைந்திட வேண்டும் என்னும் வேட்கை இன்றைய இளைஞரிடையே அதிகரித்து வருகின்றன. அதை மாற்றி வாழ்வை ஒழுங்கமைவாக உருவாக்க நோன்பு பெரிதும் உதவுகின்றது.

### ஆன்மீகப் பார்வையில் நோன்பு

ஆன்மீகப் பார்வையில் நோக்கும்போது நோன்பினால் குறைந்தது மூன்று ஆன்மீக நலன்கள் விளைவதாக ஆன்மீகவாதிகள் கூறுகின்றனர். முதலாவது ஆணவம் அடங்குகின்றது ஏழு தலையான பாவங்களுள் ஒன்று ஆணவம். ஆணவம் நிறைந்த இதயம் இறைவனோடு உறவுகொள்ள முடியாது. தாழ்வுற்று நொறுங்கிய உள்ளமே இறைவனுக்கு ஏற்புடையது. உடல் ஒறுத்தலின் வழியாகக் குறிப்பாக உணவை ஒறுக்கும்போது நம் ஆணவம் அடங்குகின்றது. தாழ்ச்சியும் அமைதியும் இதயத்தில் குடிகொள்கின்றன. இரண்டாவது மனம் மேலே எழும்புகின்றது உடல் ஒறுத்தலால் ஆணவம் குறைந்தவுடன் மனம் இறைவனை நோக்கி மேலே எழும்புகின்றது. எனவேதான் நோன்பிருந்து செபிக்கும்போது அந்தச் செபம் வலிமை நிறைந்ததாய் மாறுகின்றது.

மூன்றாவது நற்பலன்கள், புண்ணியங்கள் விளைகின்றன. பிற மனிதனின் பொருட்டு நாம் சில துன்பத்தை ஏற்க முன்வரும்போது அது ஒரு நற்செயலாக, நற்பலனாக மாறுகின்றது. இறைவன் அந்நற்செயலுக்கு நிச்சயம் கைமாறு அருள்வார்.

### நோன்பிருக்கும் வேளையில்

உண்ணா நோன்பிருக்கும் வேளையில் நம் புலன்களை அடக்குவது எளிதாகின்றது. அவ்வேளையில் பாவ நாட்டங்கள், பாவச் சிந்தனைகள் நம்மைவிட்டுத் தூர விலகி நிற்கின்றன. இதற்கு இன்னும் வலுச்சேர்க்கும் வகையில் உண்ணா நோன்பிருக்கும் வேளையில் இறைவார்த்தையை வாசிப்பது மிகவும் நன்மை பயக்கும். உடலும் உள்ளமும் அமைதியில் இருக்கும் இவ்வேளையில் இறைவார்த்தையை வாசித்து தியானிப்பது நம்மை இன்னும் அதிகமதிகமாக இறைவனருகில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.

### நோன்பும் பகிர்வும்

நோன்பிருத்தலோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது பகிர்தலாகும். உண்ணா நோன்பிருப்பதனால் நாம் சேமிக்கும் உணவையோ அதற்கான பணத்தையோ இல்லாத ஏழைகளுடன் பகிர்ந்துகொள்வது முக்கியமாகும். அப்படியல்லாமல் ஒரு நேரம் அல்லது ஒரு நாள் உணவைத் தவிர்த்துவிட்டு மறுநேரம் அல்லது மறுநாள் தவிர்த்ததையும் சேர்த்து உண்ணும் நிலைப்பாடு எந்தவிதத்திலும் பயன்விளைவிக்காது.

இன்றைய அதீத ஊடகப் பாவனையினால், சமூக வலைத் தளங்களின் ஊடுருவலால் நமது மனம் பல்வேறு வகையில் அலைக்கழிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தத் தவக்காலத்தில் நமது பல்வேறு பக்தி முயற்சிகளோடு உண்ணா நோன்பையும் கடைப்பிடிப்போம். உள்ளார்ந்த அமைதியை அனுபவிப்போம்.

**அலோசியஸ் நோயல் டானியல் – உவர்மலை**

புனிதர்களின் பாதையில்

# புனித சிலுவை யோவான்

“மனிதன் தன்னை இழந்தால் புனிதனாக முடியும்” ஆம் உலகத்துச் செல்வங்களை எல்லாம் ஒருங்கே தனதாக்கியப் பின்னும் வாழ்வில் அன்பும், அமைதியும் இழந்து தவிக்கும் மக்களைப் பார்த்து, நிலையற்ற செல்வங்களைத் துறந்து, அழியாச் செல்வமாகிய இறைவனின் அன்பையும், அமைதியையும், அரவணைப்பையும் தனதாக்க நம்மை அழைப்பவரே புனித சிலுவை யோவான். இவர் ஸ்பெயின் நாட்டில் 1542ஆம் ஆண்டு யூன் 24ஆம் திகதி பிறந்தார். இவர் ஆழ்ந்த இறைஞானம், தூய்மையான வாழ்க்கை, கனிவான பேச்சு போன்றவற்றில் சிறந்து விளங்கினார்.

தமது 16 வது வயதில் மருத்துவமனையில் தனது சேவையைத் தொடங்கினார். கார்மேல் சபையில் சேர்ந்து 1563ஆம் ஆண்டு மாசி 24ஆம் திகதி கற்பு, ஏழ்மை, கீழ்ப்படிதல் என்ற



வார்த்தைப்பாட்டின் வழியாக இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துத் துறவற வாழ்வைத் தொடங்கினார்.

மக்களுக்கு அருட்சாதனங்கள் வழியாக பரமனின் அன்பையும், இரக்கத்தையும், மன்னிப்பையும் பெற்றுத்தந்தார். தனது அர்ப்பண வாழ்வைக் கைவிட்டால் உயர் பதவிகள், அழகிய ஆடைகள், வசதியான வீடு, சிறந்த நூலகம், தங்கச்சிலுவை இவற்றை கைமாறாகப் பெற்றுக்கொள்வாய் என்றார்கள். அதற்கு யோவான் “கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்ட எனக்கு இவ்வுலகச் செல்வம் வீணே!” என்று பதிலளித்தார்.

ஆண்டவருக்காகத் துன்புற்று இறையரசின் மதிப்பீடுகளுக்கு சான்று பகர்ந்தார். ஏழ்மையின் அரசனான இயேசு கிறிஸ்துவை சொந்தமாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். இதற்காக வசதியான அறைகளைக் கைவிட்டு, வசதியற்ற அறைகளைத் தனக்காகத் தேர்ந்தெடுத்தார். வாழ்வில் ஒப்பற்ற செல்வமாக மரச்சிலுவை, விவிலியம், மரியன்னையின் படம், செபமாலை இவற்றைத் தனிப்பெரும் சொத்தாக உரிமை கொண்டாடினார். யோவான் “அன்பு செய்வதே என் கடன். வாழ்வின் அந்திப்பொழுதில் அன்பே நம்மைத் தீர்ப்பிடும்” என்று கூறினார். திருச்சிலுவையைக் கரங்களில் எடுத்து அதை உற்று நோக்கியவாறே “ஆண்டவரே! உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன். என் வாழ்க்கையை உமக்காகவே அர்ப்பணித்தேன். 1591ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி தமது 49வது வயதில் இயற்கை எய்தினார். திருத்தந்தை பதின்மூன்றாம் பெனடிக்ட் 1726இல் இவருக்கு புனிதர் பட்டமளித்தார்.

---

# மனச்சாட்சியா, ஊனியல்பா!

**இறையாசீருடன்**

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா

## இன்னுமா தயக்கம் – 35



நல்லவர்களாக வாழ்வது இயல்பான வாழ்க்கை, ஆனால் தீயவர்களாக வாழ்வது ஒருவழிப்பாதை. ஒரு முறை நாம் தீமைக்குள் சென்றுவிட்டால், மீண்டும் நாம் திரும்பி வர முடியாது. எனவே நம் வாழ்வை தூய்மையாக காத்துக் கொள்வது மிக முக்கியமானதாகும். இதனை பின்வரும் உவமை வாயிலாக விளக்கலாம்.

தவளையும் எலியும் ஒரு காலத்தில் மிக நெருக்கமான நண்பர்களாக இருந்தனர். இருவரும் நாள் முழுவதும் ஒன்றாகவே இருப்பார்கள். இரவு வரும்போது எலி தன் வலைக்கு சென்றுவிடும், தவளை தண்ணீருக்குள் சென்றுவிடும். இந்த இரவு நேரப்பிரிதல் அவர்களுக்கு மிகப்பெரிய குறையாகவே இருந்து வந்தது. ஒரு நாள் தவளை எலியிடம், நாம் ஏன் இரவில் பிரிகின்றோம், இரவிலும் ஒன்றாகவே இருக்கலாமே என்று கேட்க எலி, அதில் சில நடைமுறை சிக்கல்கள் இருக்கின்றன, எனவே நாம் பிரிந்து இருப்பதே நலம் என்றதாம். ஆனால் தவளைக்கு அதில் உடன்பாடில்லை, அது ஒரு கயிற்றை எடுத்து தன் காலையும் எலியின் காலையும் சேர்த்து நன்றாகக் கட்டிவிட்டது. இப்போது அவர்கள் எங்கு சென்றாலும் ஒன்றாகத் தான் செல்ல வேண்டும்.

இரவு வந்தது, எலி நித்திரை கொள்வதற்காக தன் வலைக்கு செல்ல விழைந்தது, ஆனால் தவளை தண்ணீருக்குள் செல்ல எத்தணித்தது. எலிக்கும் தவளைக்கும் ஒரு முக்கியமான பிரச்சனை: ஒருவேளை தவளையின் இழுப்புக்கு எலி இசைந்து தவளையோடு தண்ணீருக்குள் சென்றால், எலி தண்ணீருக்குள் மூச்சு விடமுடியாமல் இறந்துவிடும். ஆனால், எலியின் இழுப்புக்கு தவளை வந்துவிட்டால், தவளை எலியோடு வலையில் தங்க நேரிடும், அது தவளைக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. மீண்டும் மீண்டும் அது ஒவ்வொரு நாளும் இரவு வரும் போது எலியை தண்ணீரை நோக்கி இழுத்துக் கொண்டே இருக்கும்.

அன்பார்ந்தவர்களே, இது நம் வாழ்வுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு முக்கியமான பாடமாகும். எலி என்பது நம் உள்ளத்திலுள்ள மனசாட்சியைக் குறிக்கின்றது. தவளை, பாவம் செய்யத் தூண்டும் ஊனியல்பின் எண்ணங்களைக் குறிக்கின்றது. இந்த இரண்டுமே தங்கள் கால்களைக் கட்டிக் கொண்டு நம் உள்ளத்தில் தான் இருக்கின்றன. மனசாட்சி வலுவாக உள்ளவரை அது உயிரோடு இருக்கும். மனசாட்சி எவ்வளவு தான் வலுவாக இருந்தாலும் பாவம் செய்யத் தூண்டும் எண்ணங்கள் அழிந்து போய்விடாது. அவை மனசாட்சியோடு ஒட்டிக் கொண்டு உயிருடன் தான் இருக்கும்.

ஒருவேளை ஏதாவது ஒரு சூழ்நிலையில் தவளை போன்ற பாவம் செய்யும் எண்ணம் வென்றுவிட்டால், அதாவது தவளை தன்னோடு கட்டப்பட்டுள்ள எலியை தான் செல்ல எத்தணிக்கும் தண்ணீருக்குள் இழுத்துச் சென்றுவிட்டால், எலி அதோடு இறந்துவிடும். அதன் பின் எலியால் எதுவும் செய்ய முடியாது. மீண்டும் எலி உயிர் பெற்று வருவதும் சாத்தியமில்லை. அதாவது, நாம் ஒரு முறை பாவம் செய்ய நம்மை அனுமதித்து விட்டோம் என்றால்: மனசாட்சிக்கு செவிமடுக்காமல் சென்றுவிட்டோமென்றால், அந்த ஒரு பாவம் இன்னொரு பாவத்திற்கு, அந்த பாவம் மற்றுமொரு பாவத்திற்கு என்று நம்மை இழுத்துக் கொண்டே போய்விடும், மீண்டும் நாம் நல்லவர்கள் என்ற நிலைக்கு வருவது சாத்தியமில்லாத ஒன்றாக மாறிவிடும். அதன் பிறகு மனசாட்சியின் குரலுக்கு நம்மால் செவிமடுக்க முடியாமல் போய்விடும்.

இதையே “பாவம் செய்யும் எவனும் அந்தப் பாவத்திற்கு அடிமை!” என்று பவுலடிகளார் கூறுகின்றார். எனவே இன்று நாம் பாவம் செய்யும் மனநிலையை சற்று கவனமாக கையாளவேண்டும். ஒருமுறை பாவம் செய்துவிட்டால் அது உடனடியாக நம்மை அடிமைப்படுத்தி தொடர்ந்து நம்மை பாவத்திலேயே வைத்திருந்து நம்மை மீளா துன்பத்திற்குள் தள்ளிவடும். எனவே நம் தூய்மையைக் காத்துக் கொண்டு மகிழ்ச்சியான வாழ்வை பற்றிக் கொள்வோம், பாவத்தை விட்டுவிட்டு துன்பங்களிலிருந்து நம்மைக் காத்துக் கொள்வோம்.

# திருத்தூதர் பணிகள்
# 13 – 16 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பரிசுகள் முறையே 1ஆம் பரிசு 700/= 2ஆம் பரிசு 500/= 3ஆம் பரிசு 300/=**

**கேள்வி பதில்**

1. பவுல் எனும் சவுல் ஆண்டவரின் பெயரால் யாரை பார்வையற்றவர் ஆக்கினார்?

விடை:..........................................................................

2. கீசு என்பவரின் மகனான சவுல் எக்குலத்தைச் சேர்ந்தவர்?

விடை:..........................................................................

3. இவர்கள் உன்னத கடவுளின் பணியாளர்கள் மீட்பின் வழியை உங்களுக்கு அறிவிக்கிறார்கள் என கூறியது யார்?

விடை:..........................................................................

4. சிறைக்காவலர் பெரியோரே, மீட்படைய நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு பவுல், சீலாவின் பதில் என்ன?

விடை:..........................................................................

5. துரோவா நகரில் பவுல் இரவில் கண்ட காட்சி என்ன?

விடை:..........................................................................

**சரி, பிழை எழுதுக.**

6. எலிமா என்றால் மந்திரவாதி என்பது பொருள் ஆகும். ( )

7. அவர்கள் தம் கால்களில் படிந்திருந்த தூசியை அவர்களுக்கு எதிராக உதறிவிட மனமின்றி வெளியேறினார்கள். ( )

8. பவுலும் பர்னபாவும் லிஸ்திராவில் கால் ஊனமுற்றிருந்த ஒருவரை நலமாக்கினார். ( )

9. லிதியாவும் அவர் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர். ( )

10. யோவான் மனம்மாறி திருமுழுக்கு பெறுங்கள் என்று இஸ்ரேயல் மக்களுக்கு பறைசாற்றவில்லை. ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. ________________ மகனான தாவீதை என் ________________ உகந்தவனாகக் கண்டேன். என் விருப்பம் அனைத்தையும் அவன் ________________.

12. நாம் பல ______________ வழியாகவே ______________ உட்பட வேண்டும்.

13. உலகம் முழுவதும் ____________________ அடைவதற்கு நான் உன்னை ____________________ ஒளியாக ஏற்படுத்துவேன்.

14. இவற்றுக்குப் பின் நான் திரும்பி வந்து ________________ தாவீதின் கூடாரத்தை மீண்டும் எழுப்புவேன் அதிலுள்ள கிழிசல்களைப் பழுது பார்த்து அதை ________________________

15. நாங்கள் ______________________ முறையான தீர்ப்பு இன்றியே அவர்கள் எங்களைப் பொதுமக்கள் முன் ___________________ சிறையில் தள்ளினார்கள்.

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தரம் :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 2025.04.30

# திருவிவிலிய புதிர் போட்டி – 63
# எசாயா 40 – 43 அதிகாரங்கள்

- **எல்லோரும் பங்குபற்றலாம்**

1. கடல் நீரைத் தம் இந்த அளவால் கணக்கிட்டவர் யார்? வானத்தை இந்த அளவால் கணித்திட்டவர் யார்?

விடை:..........................................................................

2. ஆண்டவர் ஆவி இறங்கி வரவே இது உலர்ந்து போம். இது வதங்கிவிழும். உண்மையில் மானிடர் இது போலவே ஆவர்.

விடை:..........................................................................

3. ஆண்டவர் மேல் இதை வைத்திருப்பவர்களோ இதைப் பெறுவர். இதைப்போல் இறக்கை விரித்து உயரே செல்வர்.

விடை:..........................................................................

4. இவர்கள் இதைத் தேடுகின்றனர் அது கிடைக்கவில்லை?

விடை:..........................................................................

5. பாழ் நிலத்தில் இந்த மரங்களையும் வைப்பேன்?

விடை:..........................................................................

6. ஒருவன் இதைக் குழைப்பது போலும் இவன் இதனை மிதிப்பது போலும் அவன் ஆளுநர்களை நடத்துவான்.

விடை:..........................................................................

7. இதோ வருகிறார்கள் என்று முதன்முதலின் இவர்களுக்கு அறிவித்ததும் நானே. இவர்களை அங்கு அனுப்பியதும் நானே.

விடை:..........................................................................

8. தம் குரலொளியைத் இங்கு எழுப்பவுமாட்டார். நெரிந்த இதனை முறியார். மங்கி எரியும் இதனை அணையார்.

விடை:..........................................................................

9. இவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள். இந்த எல்லையெங்கும் அவர் புகழ் பாடுங்கள்.

விடை:..........................................................................

10. இவர்களைக் கொள்ளைக் காரரிடமும். இவர்களை கள்வரிடமும் ஒப்புவித்தவர் யார்?

விடை:..........................................................................

## பாராட்டுப் பெறுவோர் (எசாயா 30 – 34, புதிர் போட்டி 61)

1. றிசேலி மைக்கல் கொலின் - புனித குவாடலூப்பே அன்னை திருத்தலம்
2. றெமியூல் டெரன்ஸ் கீல் - கிறிஸ்து அரசர் ஆலயம்
3. ஜோ. அருஷியா - புனித சதாசகாய அன்னை ஆலயம்
4. டெனிஷா நெவில்ராஜ் - புனித வனத்து அந்தோனியார் ஆலயம்
5. அ.அ. துமேரிஜன் - குழந்தை இயேசு ஆலயம்
6. R. கேஸ்மியா - புனித சூசையப்பர் ஆலயம்
7. அன்ரனி ஜெகதாஸ் - லூர்து அன்னை திருத்தலம்
8. அன்ஷிலா ஜெரின் அன்ரனி - லூர்து அன்னை திருத்தலம்
9. டுல்சி ஹிமாயா - லூர்து அன்னை திருத்தலம்
10. மெ. கிறிசன்ஷி - லூர்து அன்னை திருத்தலம்

பெயர் :..........................................................................

முகவரி :..........................................................................

தரம் :..........................................................................

பங்கு :..........................................................................

முடிவுத்திகதி 2025.04.30

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 ற்கு மாத்திரம் நிறம்தீட்டி படம் 02 இல் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3 ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
  1 ஆம் பரிசு - 700/-    2 ஆம் பரிசு - 500/-    3 ஆம் பரிசு - 300/-

பெயர் :........................................

முகவரி :........................................

தரம் :........................................

பங்கு :........................................

*முடிவுத்திகதி 2025.04.30*

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவு - 46

### நீதிமொழிகள் அதிகாரம் 16 - 18 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ள | ங் | க | ம | ற் | ற | து | | தை |
| | ன் | பா | ப் | ரு | யி | ணா | ர | அ | த் |
| ம் | ளு | ள் | கொ | ங் | ட | ட் | நா | ர் | ண |
| கு | பா | நே | ரி | ய | த | ல் | ல | ள | ண் |
| க் | ய் | வா | று | ற் | வே | றை | நி | வா | ளெ |
| ர | ந் | வெ | ளி | யி | ட | வே | | றி | ள் |
| சு | தோ | மை | ளி | வா | றி | அ | மை | ய | உ |
| ம் | டு | ய | நி | யா | ய | ம் | ழ் | ய் | |
| ன | ம் | க | | ஒ | த் | து | தா | மெ | |
| ஞ | நே | ர் | மை | யா | ன | ந | ட | த் | தை |

1 ஆம் பரிசு 700/= ரூபா
யோசப் மோட்சமேரி
சகாயபுரம்
முதூர் –02
புனித சதாசகாய அன்னை ஆலயம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
F.R.F. ரோஹித்
இல. 5, சிவன் வீதி
திருகோணமலை
குவாடலூப்பே அன்னை திருத்தலம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
மு. கிறேஷன்
இல. 93/2, நீதிமன்ற வீதி
புனித மரியாள் பேராலயம்

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

1 ஆம் பரிசு 700/= ரூபா
வர்ஷினி பிரான்சிஸ்
இல. 33/12, அந்தோனியார் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்

2 ஆம் பரிசு 500/= ரூபா
ம. ஹின்ஷியா
இல. 33, நகம்மாள் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்





3 ஆம் பரிசு 300/= ரூபா
B. திரோன்
மாங்காயூற்று, கன்னியா
கிறிஸ்து அரசர் ஆலயம்

## திருத்தூதர் பணிகள் அதிகாரங்கள் 05 – 08

1 ஆம் பரிசு 700/= ரூபா
மெ. டிவோனியா
இல. 38, அந்தோனியார் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
ஜொவான் ஜான்ஸ்
இல. 256, மரியாள் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்



3 ஆம் பரிசு 300/= ரூபா
டி. கியோனா கிறிஸ்டா
இல. 12, புனித வலன் வீதி
பாலையூற்று
புனித லூர்து அன்னை திருத்தலம்

## திருவிவிலிய புதிர் போட்டி முடிவுகள் – 61
## எசாயா 30 – 34 அதிகாரங்கள்



1 ஆம் பரிசு 700/= ரூபா
நெவில் ராஜ் டனிற் ஷரோன்
இல. 108, உப்புவெளி
செல்வநாயகபுரம்
புனித வனத்து அந்தோனியார் ஆலயம்



2 ஆம் பரிசு 500/= ரூபா
ருபன் ஜெனிலியா
இல. 29/2, பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்

3 ஆம் பரிசு 300/= ரூபா
அ. டினுசியா
இல. 1181, பாலையூற்று
லூர்து அன்னை திருத்தலம்

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கான க.பொ.த சாதாரண தர கருத்தமர்வானது 15.02.2025 அன்று மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. தமிழ் மாணவர்களுக்கான கருத்தமர்வினை திருமதி. ஜெயவதனி மரியதாஸ் (I.S.A) அவர்களும் சிங்கள மாணவர்களுக்கான கருத்தமர்வினை ஆசிரியர் செல்வி. நிமேஷிகா தனான்ஜலி அவர்களும் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.



## திருச்சிலுவைமலை




## புனித திருமுழுக்கு யோவான் ஆலய தைப்பொங்கல் சிறப்புத் திருப்பலி



## 2025ஆம் ஆண்டிற்கான மறையாசிரியர் முதல் அமர்வு



## நற்செய்தி வாசிப்பின் பொழுது நம்மீது நாம் ஏன் சிலுவை அடையாளம் வரைகிறோம் தெரியுமா?



இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என்ற இரண்டு பிரிவுகள் அடங்கிய திருப்பலியில், அப்பமும் - இரசமும் இயேசுவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாறுவது நற்கருணை வழிபாட்டின் உச்ச நிகழ்வு. அதுபோல நற்செய்தி வாசிப்பு இறைவார்த்தை வழிபாட்டின் உச்ச நிகழ்வாகும். இறைவார்த்தையைக் கேட்டு புரிந்து கொண்டு, சிந்தையில் இருத்த நெற்றியிலும், கேட்ட இறைவார்த்தையை பிறருக்கு அறிவிக்க உதட்டிலும், கேட்ட இறைவார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திக்க நெஞ்சிலும் சிலுவை அடையாளத்தால் நம்மை நாம் அர்ச்சிக்கின்றோம்.

## உவர்மலை குழந்தை இயேசு ஆலய 39வது வருடாந்த திருவிழா



## புனித குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் உழவர் திருநாளாம் தைத்திருநாள் சிறப்புத் திருப்பலி



உழவுத்தொழிலையும் உழைப்பையும், மண்ணையும் மண்ணில் வாழும் சிற்று உயிர்களையும், வளங்களையும் மற்றும் மக்களையும் மாண்புடன் மதித்துப் போற்றும் பண்பாடு வளர இயற்கையின் அதிபதியாம் அனைத்தையும் படைத்து காத்து பராமரித்து வரும் இறைவனுக்கு நன்றி கூறும் தைத்திருநாள் நன்றி திருப்பலி எமது குவாடலூப்பே அன்னை திருத்தலத்தில் 2025.01.14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் பங்குத்தந்தை அருட்பணி ஜூட் ஜோன்சன் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியில் அனைத்து மக்களும் கலாச்சார உடை அணிந்து பங்குபற்றினர். திருப்பலியினைத் தொடர்ந்து அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.



அனைவரும் பங்குச் சமூகமாக பொங்கல் உணவினை பகிர்ந்து உண்டு மகிழ்ந்தனர். “வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும் போது அறுவடை விழாவும், ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை சேர்க்கையில் சேகரிப்பு விழாவும் எடுக்க வேண்டும்” (விடுதலைப்பயணம் 23:16)

தகவல்: பங்கு மக்கள்

## துயர் பகிர்கிறோம்

**அமரர். திருமதி. ஜோர்ஜியானா ஜோசப்**



திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள் பேராலய பங்குத்தந்தை அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக் அடிகளாரின் தாயார் ஆவார்.

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.
யோவான் 11:25